# MIN ALAI

# மின் அலை

April 2020 Volume : 8 Issue 04 Price Rs. 16.75 /- Ann. Sub. Rs. 200/-

No. 42/6/2011-R&R (Vol-VIII)
Government of India
Ministry of Power
***

Shram Shakti Bhawan, Rafi Marg,
New Delhi, 17th April, 2020

To

1. Chairperson, Central Electricity Authority, New Delhi.
2. Principal Secretary/Secretary (Energy), All State Governments/UTs.
3. Registrar, Appellate Tribunal for Electricity, New Delhi.
4. Secretary, Central Electricity Regulatory Commission, New Delhi.
5. Secretaries, All SERCs/JERCs.
6. Chairman/CMDs for all PSUs under administrative control of Ministry of Power.
7. CMDs/MDs of DISCOMs/GENCOs/TRANSCOs of all State Governments.
8. DG, Association of Power Producers, New Delhi.
9. President, FICCI, Federation House, Tansen Marg, New Delhi.
10. Head, Prayas (Energy Group), Pune.

**Subject: Proposed amendment to Electricity Act, 2003 – regarding.**

Sir/Madam,

I am directed to say that a draft Bill on the proposed Amendments to Electricity Act has been prepared.

2. The draft Electricity (Amendment) Bill, 2020 along with Statement of Reasons (SOR) are enclosed herewith with the request to provide your comments, if any, to this Ministry within 21 days from the date of this letter. The comments may also be emailed at **sandeep.naik68@gov.in and debranjan.chattopadhyay@nic.in**.

Yours faithfully,

Encl: As above

17/4/2020
(Ghanshyam Prasad)
Chief Engineer (RR & OM)
Tele No. 2371 0389

Copy to:
i) All Joint Secretaries/Economic Adviser, Ministry of Power.
ii) PS to Hon'ble Minister, Sr. PPS to Secretary (Power), PPS to AS(R&R), Sr. PPS to Chief Engineer(R&R), PS to Director (R&R)
iii) Incharge, NIC, Ministry of Power with the request to upload this document on the website of Ministry of Power under heading 'Current Notices'.

மின்சார சட்ட திருத்த மசோதா
கருத்துக்கள் தெரிவிக்க
21 நாட்கள் மட்டுமே
அவகாசம் ஏன்....??
அனைத்து தரப்பினரின்
நெருக்குதலுக்கு பிறகு ஜூன் 5ம்
தேதி வரை அவகாசம்.
நாடே... கோவிட்டில், ஊரடங்கில்
மூழ்கிக் கிடக்க
ஏன் இந்த அவசரம் .....?

**பொது மக்கள் நலனுக்கா....?**
**தனியாரின் லாபத்திற்கா....?**

மாநில உரிமைகளை பறித்திடும்,
பொது மக்களின் நலனை,
விவசாயிகள் நலனை,
நெசவாளர்கள் நலனை,
சிறு குறு தொழில்
முனைவோர் நலனை
புறக்கணித்திடும்,
மின்வாரியங்களை
தனியாருக்கு தாரை வார்க்க
முனைந்திடும்
மின்சார சட்டத் திருத்த
மசோதா 2020 வை கைவிடுக.....

## தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

பதிவு எண் 124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொதுப் பொருளாளர் |
|---|---|---|
| பொர்.A.அந்தோணிபடோவராஜ் | பொர்.V.S.சம்பத்குமார் | பொர்.G.கார்த்திகேயன் |

# மின் அலை

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்க செய்தி மலர்

மலர் 08 ஏப்ரல் 2020 இதழ் 04

ஆசிரியர்
பொர். N.R.செந்தில்
9499014992

ஆசிரியர் குழு
பொர்.A.அந்தோணிபடோவராஜ்
பொர்.V.S.சம்பத்குமார்
பொர்.G.கார்த்திகேயன்
பொர்.R.K.நரசிம்மன்
பொர்.R.சந்தோஷ்குமார்
பொர்.S.பாலாஜி

| Page | Contents |
|---|---|
| 13 | எழுத்தாளர் ஜெயமோகன் அவர்களின் பதிவுகளிலிருந்து |
| 15 | இளநிலை பொறியாளர் பதவி உயர்வும் பொறியாளர் சங்கமும் |
| 19 | நமது முறையீடுகள்! |
| 25 | ஆளுமைத்திறன் வளர்ப்போம்...தொடர் |
| 28 | ஆத்திச்சூடி தொடர்..... |

**TNEB ENGINEERS' SANGAM**
**Udangudi Building,**
**TNEB Complex,**
**144, Anna Salai,**
**Chennai - 600 002.**
**Ph : 2852 1968**
**No. 44, Ramasamy Garden Street,**
**Royapettah, Chennai - 600 014.**
**Ph : 2848 7517**
**E-mail : tnebes@yahoo.co.in**
**Web : www.tnebes.org**

**President : 9443872166**
**General Secretary : 9840956783**
**General Treasurer : 9841150516**

## எரிகின்ற வீட்டில்....

மத்திய அரசின் எரிசக்தி துறை அமைச்சகம் 17.04.2020 அன்று மின்சார சட்டம் 2003ல் சில திருத்தங்களுக்கான முன்வடிவை அளித்து அதன் மீது கருதுக்கள் கோரி அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. கருத்துக்கள் தெரிவிக்க அவகாசம் 21 நாட்கள் மட்டுமே, ஆம் மே ஒன்றாம் தேதிவரை மட்டுமே.

பேரிடர் மேலாண்மை சட்டம் 2005 பிரகடணப் படுத்தப்பட்டுள்ள, ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நேரத்தில் இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஜனநாயக நாட்டில் உரிமைகள் தாக்கப்படும் போது, அதனை சார்ந்த தொழிற் சங்கங்கள் உள்ளிட்ட அமைப்புகள் கருத்துக்களை தெரிவிக்கக்கூட வாய்ப்பில்லாத நேரத்தில், வெகு மக்களை பாதிக்கும் இச்சட்ட முடிவடிவினை அறிவிப்பது ஜனநாயகத்திற்கு ஏற்புடையது தானா?

மத்திய மாநில அரசுகளின் சுகாதாரத்துறை, மருத்துவத்துறை, உள்ளாட்சி அமைப்புகள் கோவிட்ட–19 நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. மருத்துவர்கள், செவிலியார்கள், துணை மருத்துவப் பணியாளர்கள் அனைவரும் தங்கள் உயிரையும் பணையம் வைத்து நோயால் பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்றிட மருத்துவமனைகளில் கடுமையான சேவையாற்றி வருகின்றார்கள்.

உயிர் காக்கும் மருத்துவமனைகள், மருந்து பொருட்கள், கிருமி நாசினி, தனி நபர் பாதுகாப்பு கருவிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் முழுவீச்சில் செயல்பட்டு வருகின்றன. நோய் தொற்றை கண்டறிந்திட தீவிர பரிசோதனைகள் அனைத்து இடங்களிலும் நடைபெற்று வருகின்றது. அனைத்து மக்களும் பாதுகாப்பாக வீட்டில் இருக்கின்றார்கள். இவை அனைத்தும் தங்கு தடையின்றி நடைபெற தடையற்ற மின்சாரம் தேவை. அகில இந்திய அளவில் அனைத்து மாநிலங்களிலும் மின்துறைப் பணியாளர்கள் சிறப்பாக தங்கள் பணிகளை செய்து வருகிறார்கள்.

அனைத்து மாநில அரசுகளும், இந்நோய் தடுப்பு பணியில், அனைத்து அரசுத் துறைகளையும் ஈடுபடுத்தி

செயல்பட்டு வருகின்றன. அரசுத் துறைகள் மட்டுமே இக்கட்டான நேரத்தில் களத்திலிருந்து சேவையாற்றி வருகிறது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

மத்திய மாநில அமைச்சர்கள், மக்களைவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் முதல் வார்டு உறுப்பினர் வரை அனைவரும் இக்கொடிய நோய்க்கு எதிராக, மக்களை பாதுகாக்கின்ற பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இம்மின்சார சட்ட திருத்த மசோதா பெரும்பாலான மாநில அரசுகளால் எதிர்க்கப்பட்டு வருகின்றது. மின்துறையை தனியாரிடம் தாரைவார்க்கும் இம் மசோதா தற்போது அவசியம்தானா?

அனைத்துதறைகளையும் தனியாரிடம் அளித்த மேலை நாடுகள் இன்று இக்கொடிய நோய் தாக்குதல்களை எதிர்கொள்ளமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் இந்நேரத்தில், நமது நாட்டின் முதுகெலும்பான மின்துறையை தனியாரிடம் தாரைவார்த்திட அவசரம் காட்டுவதன் அவசியம் என்ன? அதுவும் நாட்டின் பெரும்பாண்மையான மாநிலங்களில் ஊரடங்கு முடியும் முன்னரே, ஆம் மே 3ம் தேதிக்கு முன்னரே, மே 1ம் தேதிக்குள் கருத்துக்களை கோரியிருப்பதன் நோக்கம் என்ன?

பொது மக்கள் சேவையா..?

அல்லது.........?

---

**அரசுத் துறை பணியாளர்களுக்கு**
**DA உயர்வு நிறுத்திவைப்பு**
**ஈட்டிய விடுப்பு ஒப்பளிப்பு**
**நிறுத்திவைப்பு**
**வைப்பு நிதி வட்டி விகிதம் குறைப்பு**
**அரசாணைகள் வெளியீடு . . . .**

வைரமுத்துவின் கவிதை

*அவன்*
*பட்டு வேட்டியைப்*
*பற்றிய கனாவில்*
*இருந்த போது*
*கட்டிய*
*கோவணமும்*
*களவாடப்பட்டது . . .*

மேலே உள்ளதற்கும் கீழே உள்ளதற்கும் எந்த சம்மந்தமும் இல்லை...

## பொதுச் செயலாளர் கடிதம்



அன்பு பொறியாளர்களே,

வணக்கம்.

உலகையே உலுக்கிக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து தற்காத்துக் கொள்ள ஒட்டு மொத்த தேசமே ஊரடங்கை சந்தித்துவரும் இக்கட்டான இச்சூழ்நிலையில் இவ்வேளையில், இரவு பகல் பாராது, பொது மக்களுக்கு உரிய சேவையாற்றி, மருத்துவம் உள்ளிட்ட அத்தியாவசிய பணிகளுக்கு தொடர்ந்து தடையில்லா மின்சாரம் வழங்கி, தன்னுயிரையும் துச்சமென நினைத்து மக்கள் பணியாற்றி வரும் அனைத்து மின்சார வாரியப் பொறியாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசின் உத்திரவுபடி தனித்திருப்பதும், சமூக இடைவெளியை பின்பற்றுவதும், முறையான பாதுகாப்பு மற்றும் தற்காப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து கடைப்பிடிப்பது மட்டுமே கொரோனாவை வென்றிட வழிவகுக்கும்.

மே 3 வரை ஊரடங்கு நீட்டிக்கப்பட்டிருக்கும் நிலையில் தொடர்ந்து அத்தியாவசிய பணிகளில் ஈடுபடும் பணியாளர்கள் மற்றும் பொறியாளர்களின் பாதுகாப்பிற்கு தொடர்ந்து உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டிட வாரியத்தலைவர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளோம்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பொது மக்கள் ஏப்ரல் மாதம் 5ம் தேதி அன்று இரவு 9.00 மணிமுதல் 9.09 மணிவரை மின்விளக்குகளை அணைத்து தீபம் ஏற்றும் நிகழ்வின்போது, தொடரமைப்பின் நிலைத்தன்மையை காத்திடும் பொருட்டு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள, வாரியத் தலைவர் மற்றும் வாரிய அதிகாரிகளிடம்,உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டது. வாரியம் நமது ஆலோசனைகளையும் கருத்தில் கொண்டு முன்னதாகவே உரிய உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டு, எவ்வித தடைகளும் ஏற்படா வண்ணம் தொடர்ந்து மின்சாரம் வழுங்கப்பட்டது. இந்நிகழவின்போது சாதுர்யமாகவும், சிறப்பாகவும் அரும்பணியாற்றிய MLDC, மின்உற்பத்தி மற்றும் மின் இயக்குதல் பகுதி பொறியாளர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சங்கத்தின் சமுதாயப்பணியில் மேலும் ஒரு நிகழ்வாக நெல்லை மற்றும் தூத்துக்குடி அனல் மின்நிலையக் கிளைகளில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வண்ணம் அங்கு பணிபுரியும் பணியாளர்கள் மறறும் பணியாளர் குடியிருப்பில் வசிக்கும் அனைவருக்கும் பொறியாளர் சங்கத்தின் சார்பில் கபசுர குடிநீர் விநியோகிக்கப்பட்டது. கிளை பொறுப்பாளர்களுக்கும் ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி.

15.04.2020 அன்று நிலுவையிலள்ள தொழில் நுட்ப உதவியாளர் (மின்னியல்) உள்முகத் தேர்வு பட்டியல் உடன் வெளியிடவும், இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலை (இயந்திரவியல்) பதவி உயர்வுக்கு விவரங்கள் கேட்டிடவும்,இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலை (மின்னியல்) பதவி உயர்வுக்கு DPC நடத்திடவும், உதவிப் பொறியாளர் / மின்னியல், இயந்திரவியல், சிவில் உள்முகத்தேர்வுக்கு விவரங்கள் கேட்டிடவும் வாரியத் தலைவர் அவர்களிடமும் தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு அவர்களிடமும் முறையீடுகள் அளிக்கப்பட்டது. உதவி செயற் பொறியாளர் / மின்னியல் பதவி உயர்வில் விடுபட்ட பொறியாளர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கிடவும், புதிதாக பதவி உயர்வுக்கு பட்டியல் கேட்டிடவும் முறையீடு அளிக்கப்பட்டது.

இளநிலை பொறியாளர் முதல்நிலை / மின்னியல் பதவி உயர்வுக்குக் கோப்பட்ட தகவல்கள் அனைத்தும் முழுமையாக வந்து சேர்ந்துள்ளதை உறுதி செய்தும், நிலுவையிலுள்ள தகவல்கள் முழுமையாக வந்து சேர்ந்துள்ள நிலையில் உடனடியாக பதவி உயர்வுகள் வழங்கிட வலியுறுத்தி தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு அவர்களிடம் 17.04.2020 அன்று முறையீடு அளிக்கப்பட்டது. தொடர்ந்து விரைந்து DPC நடத்திட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நமது சங்கத்தின் தொடர் முயற்சியின் பலனாக 1748 இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலை (மின்னியல்) பொறியாளர்களுக்கு முன்னுரிமைப் பட்டியல் (Inter-se-Seniority) பணியைமைப்பு நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

நமது தொடர் முறையீட்டுக்குப் பின், ஊரடங்கு நேரத்தில் அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ள, பணியாளர்கள் பணிசெய்வதற்கான வரன்முறைகள் வாரிய உத்திரவுகளாக 17.04.2020 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

ஒட்டு மொத்த தேசமும் கொரோனா வைரஸ் பாதிப்புகளில் தன்னை தனிமைப் படுத்தியிக்கும் இவ்வேளையில், மத்திய அரசு வரைவு மின்சார சட்டத் திருத்த மசோதா 2020 ஐ 17.04.2020 அன்று வெளியிட்டு, அதன்மீது எதிர்வரும் 21 நாட்களுக்குள் தங்கள் கருத்துக்களை பதிவு செய்திட கோரியிருந்நது.

மாநில உரிமைகளைப் பறித்திடும், பொது மக்கள் நலனை, விவசாயிகளின் நலனை, சிறு குறு தொழில்முனைவோர் நலனை பாதித்திடும், மின் வாரியங்களை தனியாருக்கு தாரை வார்த்திடும் இம்மசோதாவை கைவிடக் கோரியும், நாட்டில் இயல்பு நிலை திரும்பும் வரை தற்காலிகமாக ஒத்திவைக்க கோரியும் மத்திய அரசை வலியுறுத்த, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களிடம் 21.04.2020 அன்று முறையீடு அளிக்கப்பட்டது.

இக்கோரிக்கையை வலியுறுத்தி அகில இந்திய அளவில் AIFOPDEயும், தேசிய அளவிளான மின்வாரிய அனைத்து தொழிற்சங்களின் கூட்டமைப்பும் (NCCOEEE) மத்திய மின்துறை அமைச்சர் அவர்களுக்கு முறையீடு அளித்துள்ளது.

அனைத்து தரப்பினரின் நெருக்குதலுக்குப் பிறகே மத்திய அரசு கருத்துக்களை தெரிவிக்க கூடுதல் கால அவகாசம் (ஜூன் 5ம் தேதி வரை) அளித்துள்ளது. மின்துறையை பாதுகாத்திட இம்மசோதாவை கைவிட வைக்க வேண்டிய பொறுப்பு நம்மிடம் உள்ளது. இதனை உணர்ந்து காலத்தின் தேவை கருதி செயல்படுவோம்.

நாடு தழுவிய ஊரடங்கு மற்றும் கொரானா காரணமாக தொடர்ந்து அனைத்துக் கிளை பேரவைக் கூட்டங்களும் மேலும் ஒத்திவைக்கப்படுகின்றன.

-பொதுச் செயலாளர்

**Having conceived of his purpose,**
**a man should mentally mark out**
**a straight pathway to its achievement,**
**looking neither to the right**
**nor to the left,**
**but straight.**

- **James allen**

**மின்சார சட்டத்திருத்த மசோதா 2020 முன் வரைவு கருத்துக்கள் கேட்பு கடிதம்**

No. 42/6/2011-R&R (Vol-VIII)
Government of India
Ministry of Power
***

Shram Shakti Bhawan, Rafi Marg,
New Delhi, 17th April, 2020

To

1. Chairperson, Central Electricity Authority, New Delhi.
2. Principal Secretary/Secretary (Energy), All State Governments/UTs.
3. Registrar, Appellate Tribunal for Electricity, New Delhi.
4. Secretary, Central Electricity Regulatory Commission, New Delhi.
5. Secretaries, All SERCs/JERCs.
6. Chairman/CMDs for all PSUs under administrative control of Ministry of Power.
7. CMDs/MDs of DISCOMs/GENCOs/TRANSCOs of all State Governments.
8. DG, Association of Power Producers, New Delhi.
9. President, FICCI, Federation House, Tansen Marg, New Delhi.
10. Head, Prayas (Energy Group), Pune.

**Subject: Proposed amendment to Electricity Act, 2003 – regarding.**

Sir/Madam,

I am directed to say that a draft Bill on the proposed Amendments to Electricity Act has been prepared.

2. The draft Electricity (Amendment) Bill, 2020 along with Statement of Reasons (SOR) are enclosed herewith with the request to provide your comments, if any, to this Ministry within 21 days from the date of this letter. The comments may also be emailed at **sandeep.naik68@gov.in and debranjan.chattopadhyay@nic.in**.

Yours faithfully,

Encl: As above

17/4/2020
(Ghanshyam Prasad)
Chief Engineer (RR & OM)
Tele No. 2371 0389

Copy to:
i) All Joint Secretaries/Economic Adviser, Ministry of Power.
ii) PS to Hon'ble Minister, Sr. PPS to Secretary (Power), PPS to AS(R&R), Sr. PPS to Chief Engineer(R&R), PS to Director (R&R)
iii) Incharge, NIC, Ministry of Power with the request to upload this document on the website of Ministry of Power under heading 'Current Notices'.

**மின்சார சட்டத்திருத்த மசோதா 2020 முன் வரைவு கருத்துக்கள் அளிக்க அவகாசம் கேட்டு AIFOPDE அளித்திட்ட கடிதம்**

# ALL INDIA FEDERATION OF POWER DIPLOMA ENGINEERS

(An Apex Body Embodying All State Power Diploma Engineers Associations Throughout India)


National President
Er. R.K. Trivedi
Mob. 9415030677

HEAD OFFICE :
33/11 KV Sub Station,
Hydel Colony, Sector-20,
Noida-201301 (Uttar Pradesh)

aifopde@gmail.com

aifopde.org

National Secretary General
Er. Abhimanyu Dhankhar
Mob. 9254016116

CAMP OFFICE (For Correspondence) :
C/o 1265/13, Sagar Traders,
Sukhpura Chowk, Gohana Road,
Rohtak-124001 (Haryana)

aifopde.sg@gmail.com

Working President
Er. G.V. Patel
M. : 9415900262

Sr. Vice President
Er. D.S. Dhatwalia
M. : 9418031402

Vice President
Er. S.K. Mahadule
M. : 8226012079

Vice President
Er. Sanjay Chakraborty
M. : 9433903512

Additional Secretary General
Er. Jay Prakash
M. : 9452735122

Deputy Secretary General
Er. Devinder Singh
M. : 9417040186

Deputy Secretary General
Er. A. Antony Padovaraj
M. : 9443872166

Chief Organising Secretary
Er. Satya Ranjan Sarkar
M. : 9434371470

Finance Secretary
Er. Jaswant Rai
M. : 9872412866

Publicity Secretary
Er. Varinder Kumar Sharma
M. : 9415900551

Auditor
Er. J.C. Pant
M. : 9456590125


*Ref No.* 11/NC/AIFOPDE/2020 *Date* 21/04/2020

**Shri R K Singh,**
**Hon'ble Minister Of State (I/C),**
**Power, New & Renewable Energy,**
**Shram Shakti Bhawan, Rafi Marg,**
**New Delhi.**

**Subject:-Regarding Proposed Amendment to Electricity Act 2003 vide below referred letter–To held it in abeyance till the Covid-19 emergent situation normalization or 30th Sep 2020 whichever is later and reissuance of the same at the appropriate and suitable times for comments/suggestions from all stakeholders.**

**Reference:-Ministry of Power, Government of India, Letter No.42/6/2011-R&R(Vol-VIII) Dated17th April,2020.**

**Respected Sir,**

In the subject cited matter and the above referred letter, the Federation like to convey its vehement protest to Ministry of Power for proposing the Amendment to Electricity Act 2003 and giving a time limit of 21 days for submission of comments and objections amidst the spread of pandemic Covid-19 while the whole world including India is under lockdown and the whole mankind is breathing under threat of mass extinction.

We as National Federation are extremely surprised about the selection of time and allotted time frame for circulation of **Proposed Amendment to Electricity Act- 2003** and comments thereof, while all efforts in this matter turns out futile since last seven years and we are unable to find valid ground/reason for the selection of this time and seems like an opportunistic move to deprive all stakeholders to raise objections, make suggestions for these Anti People-Anti Employee amendments and an effort to snatch the democratic rights of all stakeholders.

1 | Page

On one hand side when about 1.5 million electricity employees and engineers are working as **unsung Covid Warriors** to ensure the availability of Power throughout the length and breadth of country and facilitating availability of electricity just to ensure that all emergency services continues to function and fellow Covid warriors can perform their prime duties of saving the mankind along with facilitating comfortable stay to people of India to support **"Stay Home Stay Safe"** campaign by risking their lives under the **call and able leadership of Hon'ble Prime Minister of India and ornamented their services to Nation by achieving the historical feat of maintaining the stability of National Grid on 9th April 2020 by successfully enduring the jerk of 31000 MW in demand of Electricity under your good self leadership.**

Whereas on the other hand, all electricity employees and engineers found themselves **not only unrecognized, unsung, unfairly treated but also feeling cheated to come to know about the subject cited proposed amendment in Electricity Act-2003 and there is strong resonance of utter dismay and displeasure among them and resented voices are being raised through the various National federations, associations and unions.**

It is also worthwhile to mention here that Federation have requested to your **good self to extend the Insurance cover of Rs. 50 Lacs to all electricity employees owing to the fact that all existing departmental and personal insurances would become unfruitful due to pandemic clause of insurance companies to boost their moral and reassure their families in this tough time but instead of paying any attention to our legitimate and just demand all electricity employees are being forced to see this proposed amendment.**

Prime facie, the proposed amendments are of fundamental nature and incorporating the major changes in the structure of Electricity Act 2003, these are required to be studied and analyzed in depth. **All India Federation of Power Diploma Engineers (AIFOPDE)** is of the confirmed opinion that comments, views and objections of all the stake holders including consumer and public in general must be obtained and due consideration should be given to all of them by the Government of India . But this is not the appropriate time to undergo such an important activity while the Nationwide lockdown has been extended till 03rd May,2020 and is expected to extend further with fair probability of relaxation in lockdown in multiple phases.

To discuss and finalize the statements of objections and suggestions, regarding the subject cited proposed amendment to Electricity Act, 2003, we as All India Federation of Power Diploma Engineers would have to call National Level Meeting and sought feedbacks from all state constituents in this matter which is not possible in the provided time frame amidst Nationwide Lockdown.

However as a Federation we would like to state that by honestly analyzing the present position during massive outbreak of pandemic Covid-19 and contribution of Government employee and government sector vis –a-vis so called big private entities and private sphere, **One would find that India is emerging as a world leader in fight with Corona on the shoulders of Government employees and PSU's despite all odds like high density population, high number of infected immigrants from abroad and due to India's massive public infrastructure in health, banking, power, police, water and sanitation, telecommunication, transport specifically railway, scientific institutions etc. which are ornamented with dedicated employees.** There is not only even a single maiden case where any Government employee has taken his or her steps back in this fight. In addition to this, all of them have donated the parts of their salaries to the Covid Relief fund on their own. **All Government employees are still ready to sacrifice themselves in the line of their duties.** One would be scare enough to think about the present situation in absence of these Covid Warriors if all these PSU's had been disinvested/ sold as per plans of Government of India, **So owing to their contributions and future importance we would like to request the Government of India to roll back all their plans for selling /disinvestment of PSU's including the present subject cited matter and scrap all of them.**

**Further, if the Ministry of Power, Government of India founds it inevitable to bring the subject cited proposal for amendment to Electricity Act, 2003 then we would like to assert as well as request as a Federation that this proposal must be held in abeyance till the normalization of present pandemic situation or 30th Sep 2020 whichever is later.**

**Thanks in anticipation.**

**Sincerely Yours**

**Secretary General**
**All India Federation of**
**Power Diploma Engineers**

**A copy of the above is being forwarded to following dignitaries for kind information and further necessary action please.**

1. **Hon'ble Prime Minister, GOI, New Delhi for kind intervention please.**
2. **Hon'ble Chief Ministers of all States.**
3. **Hon'ble Lt. Governors & Administrators of all UT's.**
4. **Hon'ble Power Ministers of all States.**
5. **Secretary Power, GOI, New Delhi.**
6. **The National Coordination Committee of Electricity Employees & Engineers.**

## மின்சார சட்டத்திருத்த மசோதா 2020 முன் வரைவு கருத்துக்கள் அளிக்க அவகாசம் கேட்டு பொறியாளர் சங்கத்தின் சார்பில் அளித்திட்ட கடிதம்


# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

Regd. No. 124/MDS (Recognised)

(Affiliated to All India Federation of Power Diploma Engineers)

144, Electricity Avenue, Anna Salai, Chennai - 600 002.

44, Ramasamy Garden Street, Royapettah, Chennai - 600 014.

Phone : 28521968, E-mail: tnebes@yahoo.co.in

| PRESIDENT | GENERAL SECRETARY | GENERAL TREASURER |
|---|---|---|
| Er. A. ANTONY PADOVARAJ | Er. V.S. SAMPATHKUMAR | Er. G. KARTHIKEYAN |
| 9443872166 | 9840956783 | 9841150516 |


21.04.2020

To

**The Honourable Minister of Electricity,**
Government of Tamil Nadu,
Chennai – 9.

Respected Sir,

Sub: Notice on Amendment to Electricity Act 2003 issued by Power Ministry of India – Inadequate time given for submission of comments and objections amidst COVID – 19 pandemic – Intervention of Honourable Minister of Electricity and Tamil Nadu Government in this matter – Regarding.

--

Engineers and Staff of TANGEDO (TNEB) have been carrying out the arduous task of catering power to the public in Tamil Nadu amidst COVID – 19 pandemic in an exemplary manner under the stewardship of the Honourable Chief Minister of Tamil Nadu and the Honourable Minister of Electricity.

At this juncture the Power Ministry of India has put a notification on Amendment to Electricity Act 2003 inviting comments and objections if any to be raised within 21 days from the date of notification. This is quite perplexing as the timing of this notification is strongly objectionable.

The entire Power Sector team throughout the Country including our State of Tamil Nadu are geared up in their duties, functioning undeterred which is highly commendable. Even Unions and Associations are doing a great job during this period educating their members redressing the Management on this pandemic situation alone setting aside all their regular demands and representations.

Hence this notification at this juncture and allowing us a paltry 21 days to file our comments and objections cannot be taken in the right spirit. Various Unions and Associations at National level and in our State have raised their objections for the Amendment to Electricity Act 2003 and conducted various forms of protest for the past few years as it is totally against the welfare of the people.

Continuation Sheet

# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

Presently Unions and Associations could present their comments and objections only after holding discussions among them and others on the draft bill, which couldn't be done presently due to curfew and other restrictions in the State and the Country.

Being a responsible Trade Union in the Power Industry for more than five decades we are ready to offer our views in this matter as we have done in the past for the wellbeing of the Power Industry (TANGEDCO/TNEB).

Before taking a decision and communicating the Central Government, discussion with us and other Unions in this regard to hear our views will augment well for the wellbeing of the industry. But all these could be done only after restoration of normalcy.

Hence we TNEB Engineers' Sangam invite the attention of the Honourable Minister of Electricity in this regard and request the State Government to **insist the Central Government to keep Amendment to Electricity Act 2003 in abeyance until restoration of normalcy,** so that power to the public could be catered in the present pandemic situation without any hiccups please.

Thanking You, Sir,

Yours Sincerely,

(V.S.Sampath Kumar)
General Secretary

Copy to:

The Chairman cum Managing Director / TANGEDCO

---

**If I believe that I can do it,**
**I shall surely acquire the**
**Capacity to do it even if**
**I may not have the capacity**
**At the beginning...**

**- Mahatma Gandhi**

**மின்சார சட்டத்திருத்த மசோதா 2020 முன் வரைவு கருத்துக்கள் அளிக்க அவகாசம் கேட்டு அனைத்து தரப்பினரின் கோரிக்கையை ஏற்று ஜூன் 5ம் நாள் வரை அவகாசம் கொடுக்கப்பட்ட கடிதம்**

No. 42/6/2011-R&R (Vol-VIII)
Government of India
Ministry of Power
***

Shram Shakti Bhawan, Rafi Marg,
New Delhi, 27th April, 2020

To

1. Chairperson, Central Electricity Authority, New Delhi.
2. Principal Secretary/Secretary (Energy), All State Governments/UTs.
3. Registrar, Appellate Tribunal for Electricity, New Delhi.
4. Secretary, Central Electricity Regulatory Commission, New Delhi.
5. Secretaries, All SERCs/JERCs.
6. Chairman/CMDs for all PSUs under administrative control of Ministry of Power.
7. CMDs/MDs of DISCOMs/GENCOs/TRANSCOs of all State Governments.
8. DG, Association of Power Producers, New Delhi.
9. President, FICCI, Federation House, Tansen Marg, New Delhi.
10. Head, Prayas (Energy Group), Pune.

**Subject: Proposed amendment to Electricity Act, 2003 – regarding.**

Sir/Madam,

I am directed to refer to this Ministry's letter of even number dated 17.4.2020 seeking comments of stakeholders on the draft Electricity (Amendment) Bill 2020. It was requested to submit comments within 21 days i.e. by 8th May, 2020.

2. This Ministry have received requests from various stakeholders for extension of time for submission of comments on the draft Amendments. Accordingly it has been decided to extend the time period for submission of comments/ observations/ suggestions on the draft Electricity (Amendment) Bill 2020 to this Ministry till **5th June, 2020.**

3. This issues with the approval of the competent authority.

Yours faithfully,

Encl: As above

(Ghanshyam Prasad)
Chief Engineer (RR &OM)
Tele No. 2371 0389

Copy to:
i) All Joint Secretaries/Economic Adviser, Ministry of Power.
ii) PS to Hon'ble Minister, Sr. PPS to Secretary (Power), PPS to AS(R&R), Sr. PPS to Chief Engineer(R&R), PS to Director (R&R)
iii) Incharge, NIC, Ministry of Power with the request to upload this document on the website of Ministry of Power under heading 'Current Notices'.

## எழுத்தாளர் ஜெயமோகன் அவர்களின் பதிவுகளிலிருந்து

நேற்று காலை பத்து மணியளவில் சுகாதாரப் பணியாளர் இருவர் எங்கள் வீட்டுக்கு வந்தார்கள். எங்கள் வீடு வெளியே பூட்டியிருந்தமையால் சென்று விட்டு மீண்டும் வந்தார்கள். இரண்டு பெண்கள். முககவசமும் கை கவசமும் அணிந்தவர்கள். இரு கணிப்பொறிப் பட்டியலை வைத்துக்கொண்டு பெயர், வயது, உடல்நிலை ஆகியவற்றை சரிபார்த்தனர். கோவிட் வைரஸ் எப்படி வரும் என்பதை ஓரிரு வரிகளில் சொல்லி, வெளியே போகவேண்டாம், கேட் உட்பட எதைத் தொட்டாலும் கைகழுவ வேண்டும் என்பது போன்ற செய்திகளையும் சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

நண்பர் லட்சுமி மணிவண்ணனிடம் அவரிடம் மாத்திரைகள் எல்லாம் இருக்கின்றனவா என்று கேட்டேன். அவை மருத்துவ துறையால் இரண்டு மாதத்திற்கு தேவையான அளவு முன்னரே அளிக்கப்பட்டுள்ளன, எந்த பிரச்சனையும் இல்லை என்று சொன்னார்.

இன்று காலை மொட்டைமாடியில் நின்றிருக்கையில் அவர்கள் எங்கள் குடியிருப்புக்குப் பின்பக்கம் செல்வது தெரிந்தது. நாட்டிலுள்ள அத்தனை வீடுகளுக்கும் குறிப்பிட்ட இடைவெளியில் நேரில் சென்று ஆராய்வது அவர்களின் பணி. காய்ச்சல், இருமல் பிரச்சனைகள் இருக்கின்றன என்று தெரிந்தால் அத்தகவலை அறிவிப்பார்கள். அடுத்தகட்ட மருத்துவக்குழு வருகிறது. கோவிட்டுக்கான வாய்ப்பு உண்டு என்று தெரிந்தால் சுவரில் அறிவிப்பை ஒட்டுகிறார்கள். அந்த இடத்தையே தனிமை படுத்துகிறார்கள்.

இந்தியா இன்று கோவிட் வைரஸ் எதிர் கொள்வதில் எடுத்துக்கொள்ளும் பெருமுயற்சி மிகமிக அறிவியல் சார்ந்தது. ஏற்கனவே சிக்கன்குனியா, சார்ஸ் அதற்கு முன் காசநோய், மலேரியா, இளம்பிள்ளைவாதம், அதற்கு முன் அம்மைநோய், காலரா ஆகியவற்றை வெற்றிகரமாக எதிர்கொண்ட அனுபவ பின்புலம் கொண்டது. பகுதிகளாக பிரித்து நேரடி மானுடக் கண்கானிப்பில் வைத்தல், தனிமைப்படுத்துதல், இலவச சிகிச்சை என் மூன்று பகுதிகள், அவை வெற்றிகரமாக ஒருங்கிணைக்கப்பபட்டிருக்கின்றன.

மிக எளிமையான அடித்தட்டு ஊழியர்கள் இவர்கள். ஊழியர் ஒருவருக்கு ஒரு நாளுக்கு நாற்பது வீடுகள் கணக்கு. இருவர் இருவராக செல்கிறார்கள். இந்தியா என்ற இந்த மாபெரும் நிலப்பரப்பை, நூறு கோடி மக்களை சென்றடையவதற்கு மிகப்பெரிய உழைப்பும் அறிவியல்பூர்வமான திட்டமிடலும் முன் அனுபவமும் தேவை. இத்தகவல்களை பதிவு செய்து ஒருங்கிணைத்து அறிக்கைகளாக ஆக்குவதற்கு நவீன புள்ளியியல் சார்ந்த திட்டமிடலும் முன் அனுபவமும் தேவை. இந்தியா அதற்கென்றே உருவாக்கி கொண்ட பல அறிவியல்ரீதியான கொள்கைகள், சுருக்கும் முறைமைகள் உள்ளன.

இந்த ஊழியர்கள் முன்னரும்எங்கள் வீட்டிற்கு வந்திருக்கிறார்கள். சிக்கன் குனியா வந்தபோது ஒவ்வொரு வீட்டு கொல்லைப் பக்கம் சென்று நீர் தேங்குகிறதா என்று பார்த்தனர். மலேரியா பரிசோதனைக்காக வந்தனர். ஆண்டுக்கு இரண்டு முறையாவது வந்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவின் மக்கள் தொகை மிகப்பெரிய சவால். அதை சிறுக சிறுகக் கையாண்டு பழகியிருக்கிறார்கள். இந்த அமைப்பு இப்போது உருவாக்கப்பட்டது அல்ல, என்றென்றும் இருந்து கொண்டிருப்பது.

நானும் சில ஆண்டுகளுக்கு முன் இதைப்போன்ற வேலைகளைச் செய்தவன் என்ற முறையில் இதிலுள்ள சவால்களை அறிவேன். இதில் எட்டு அரசுத்துறைகள் ஈடுபட்டுள்ளன. அவற்றை ஒருங்கிணைக்கும் அரசு அதிகாரிகளின் அடுக்கு வரிசை உள்ளது. அந்த அமைப்பு பிரிட்டிஷாரால் உருவாக்கப்பட்டது என்ற தொன்மம் உண்டு. அது பொய். அது ஷெர்ஷா காலம் முதல் இருப்பது அவணப்படுத்தப்பட்டுள்ளது. இன்றும் அத்தனை அதிகாரிகளுக்கும், நிகழ்வுகளுக்கும் ஷெர்ஷா காலத்து பெயர்கள்தான்– சிரஸ்தார், தாசில்தார், ஜமாபந்தி. பிரிட்டிஷார் அதை மேலும் ஒருங்கமைத்தனர். ஷெர்ஷாவுக்கு முந்தைய வரலாற்றுக் காலகட்டத்தில் வேறுவகையில் இருந்திருக்கலாம் என்பதற்கான சான்றுகள் உள்ளன.

மாறுபட்ட நில அமைப்பும், மையப்படுத்தப்படாத சமூக அமைப்பும் கொண்ட இந்தியா எனும் தேசத்தில் இந்தியா செய்யும் இந்தப்பணி, இதன் நடைமுறை அறிவியல் உலக நாடுகளேகூட கற்றுக்கொள்ள வேண்டியது. இன்றைய செய்திகளை வைத்துப் பார்த்தால் சர்வாதிகாரம் திகழும் சில நாடுகளை தவிர வேறெங்கும் இத்தகைய முழுமையான ஒருங்கிணைப்பு நிகழவில்லை என்றே தெரிகிறது.

இந்தியா சுதந்திரம் அடைந்த காலத்தில் கிராமசேவக் என்ற பெயரில் தொடங்கி இன்று பலவகையான ஊழியர்களைக் கொண்டதாக விரிந்திருக்கும் மாபெரும் கிராம நிர்வாக அமைப்பு ஒன்று இங்கே உள்ளது. அந்த ஊழியர்களை பயிற்றுவிப்பதில் திண்டுக்கல் காந்திகிராமம் போன்ற நிறுவனங்களின் பங்களிப்பு மிகப்பெரியது.

இதில் முக்கியமான பங்கு வகிப்பவர்கள், இந்த கடைநிலை ஊழியர்கள். இந்த ஊழியர்கள் அரசை ஏமாற்றலாம், வேலை செய்யாமல் இருக்கலாம். அத்தனை எண்ணிக்கையில் இருக்கும் அவர்களை ஒன்றுமே செய்யமுடியாது. ஆனால் அவர்கள் அப்படி செய்வதில்லை. இந்தியாவின் கடைநிலை ஊழியர்களுக்கு அவர்களின் வேலை பற்றிய பெருமிதம் இருக்கின்றது. அது ஒரு மாபெரும் ஊக்க சக்தி.

**அந்த பெருமிதம் தாங்கள் அரசூழியர் என்பதிலிருந்து வருகிறது. இந்தியாவின் வல்லமை அரசூழியர்களே. சுனாமி உள்ளிட்ட நெருக்கடிகளில் அதை கண்கூடாகக் கண்டு பதிவு செய்திருக்கிறேன். இந்த மாபெரும் அரசூழியர் அமைப்பு பொருளியல் சுமை என்றும் அதை இல்லாமல் ஆக்கவேண்டும் என்றும் 'நிபுணர்கள்' சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எப்போதும் அதற்கு எதிரானவனாக இருந்திருக்கிறேன். நூறு கட்டுரைகளாவது எழுதியிருப்பேன். அப்படி அரசூழியர் அமைப்பை அழித்த நாடுகள் எல்லாம் கதறிக் கொண்டிருக்கின்றன.**

மாடியில் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். மெலிந்த கரிய பெண்கள் வீடுகள் முன் சென்று நின்று கேட்டை தொடாமலேயே கூவி அழைக்கிறார்கள் பலமுறை. உள்ளிருந்து ஒருவர் வருகிறார். அவர் எவ்வகையிலும் இனிய முகம் காட்டுவதில்லை. செய்திகளை கேட்டு பதிவு செய்து விட்டு திரும்பிச் செல்கிறார்கள். தோளில் பை போட்டிருக்கிறார்கள், அதில் குடிநீர். ஒரு நாளில் இருபது கிலோமீட்டர் நடக்க வேண்டும். இந்தியா என்பது இவர்களே.

மொத்த நகரமும் உறைந்திருக்கிறது. தெரு நாய்கள் அன்றி எங்கும் உயிரசைவே இல்லை. மரங்கள் காற்றில் ஆடிக்கொண்டிருக்கின்றன. அந்த இரு பெண்களும் பேசிக் கொண்டே செல்கிறார்கள் எஞ்சியிருக்கும் உயிரசைவு என.

இன்று காலை ஏனோ இவர்களைக் கண்டது நிறைவளிக்கிறது. ஒவ்வோருநாளும் முற்றத்திற்குச் சென்று செம்பருத்தியையும் பொற்கொன்றையையும் பூத்திருப்பதைப் பார்த்திருக்கிறேன். மலர்கள் அளிக்கும் நம்பிக்கை அபாரமானது. இந்த மனிதர்களும்...

jeyamohan.writerpoet@gmail.com

பல் முளைக்கையில்
ஈறு வலிக்கும்
மாற்றம் முளைக்கையில்
வாழ்க்கை வலிக்கும்
வலியெடுத்தால் வழிபிறக்கும்
வழிபிறந்தால் வலியிருக்கும் ..

\- வைரமுத்து

## இளநிலை பொறியாளர் பதவி உயர்வும் பொறியாளர் சங்கமும்

அன்பார்ந்த பொறியாளர்களே

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உதவிப் பொறியாளர் / இளநிலை பொறியாளர் முதல் நிலை / இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலை (AE/JE I Gr / JE II Gr) பதவிகள் விநியோகப் பிரிவுகளில் 2:3 விகிதாசாரத்திலும் ஏனைய பகுதிகளில் 2:2:1 விகிதசாரத்திலும் நிரப்பப்படுகிறது. உதவிப் பொறியாளர் பதவிகள் பட்டம் படித்தவர்கள் மற்றும் AMIE படித்தவர்களைக் கொண்டு நேரடி தேர்வு மற்றும் உள்முகத் தேர்வு மூலம் நிரப்படுகிறது.

இளநிலை பொறியாளர் முதல் நிலை பதவிகள் இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலை பதவிகளிலிருந்து பதவி உயர்வு மூலம் நிரப்பப்படுகிறது.

இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலை பதவிகளில் 75 சதவிகதம் தொழில் நுட்ப உதவியாளர்களிலிருந்து பதவி உயர்வு மூலமும், 25 சதவிகிதம் மின்பாதை ஆய்வாளர்கள் மற்றும் அதற்கு சமமான பதவிகளிலிருந்து Transfer method மூலமும் நிரப்பபடுகிறது.

ஆரம்ப காலத்தில், 1957 ம் ஆண்டிற்கு முன் நமது மின்சார வாரியம் அரசு துறையாக இருந்த போது உதவிப் பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலை பதவிகள் தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் நேரடியாக தேர்வு செய்யப்பட்டனர்.

1957ம் ஆண்டு ஜுலை மாதம் முதல் நாள் (1.7.1957) அன்று Madras State Electricity Boardஎன்ற தனி வாரியமாக உருவாக்கப்பட்ட பின் வாரிய விதி 92ன் படி (Regulation 92) உதவிப் பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலை பதவிகள் நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்யப்பட்டனர். அந்த காலகட்டத்தில் பொறியாளர்கள் தேவைக்கு குறைவாக இருந்ததினால் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட்டனர். 1970ம் ஆண்டில் இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலை பதவிகள் வாரியத்திலிருந்த தொழில் நுட்ப உதவியாளர்களின் பணி மூப்பு (Seniority) அடிப்படையில் தற்காலிக அடிப்படையில் பதவி உயர்வாக 240 பேருக்கு வழங்கப்பட்டது. 1965 ல் பிப்பரவரியில் பணியில் சேர்ந்த பொர்.D.சண்முகம் வரை வழங்கப்பட்டது. பின்னர் பதவி உயர்வு முறை கைவிடப்பட்டு நேரடி நியமனம் மூலம் நிரப்பிட அறிவிப்பு வெளியிடப்பட்டது. அன்றைய தேதியில் பட்டயம் படித்தோர் 1500 நபர்கள் தொழில் நுட்ப உதவியாளர்களாகவும், 900 நபர்கள் தினக்கூலிகளாகவும் பணியிலிருந்தனர். 1967 ல் துவங்கப்பட்ட பொறியியல் டிப்ளமோதாரர்கள் கழகம் (EDHA) இதனை எதிர்த்து போராடியது. போதிய அனுபவமும் பணபலமும் இல்லாததால் இப்போராட்டம் வெற்றியை தரவில்லை. அந்த நேரடி நியமனம் 1971ம் ஆண்டு 493 நபர்கள் தேர்வு செய்யப்பட்டனர். பலமூத்த பொறியாளர்கள் பின்னுக்கு தள்ளப்பட்டு, வெளியே படிப்பை முடித்தவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

இந்த தேர்வுக்குப் பின்னர் பட்டயப் பொறியாளர்கள் தங்களது எதிர்காலம் குறித்து தீர்க்கமான முடிவெடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். அதன்பின் முதல் படியாக 16.03.1973ம் அன்று சென்னை, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் எழும்பூரில் உள்ள தர்மப்பிரகாஷ் திருமண மண்டபத்தில் EDHA வின் முதல் மாநில மாநாடு நடத்தப்பட்டது. சுமார் 1000 பொறியாளர்களுக்கு மேல் அண்ணாசாலையிலுள்ள மின்சார வாரிய தலைமை அலுவலகத்திலிருந்து ஒலிமுழக்கம் எழுப்பியபடி ஊர்வலம் நடத்தப்பட்டது. மாநாட்டில் அன்றைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் கலந்து கொண்டார்கள். அந்த மாநாட்டில் நான்கு கோரிக்கைகள் வைக்கப்பட்டன. முதல் கோரிக்கையாக இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலை பதவிகள் பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வாக வழங்குவது. அன்றைய தமிழக முதல்வர் அவர்கள் இக்கோரிக்கை குறித்து பின்னர் பேசி முடிவெடுக்கலாம் என்று கூறியதுடன் உதவிப் பொறியாளர் / இளநிலை பொறியாளர் முதல் நிலை / இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலை (AE/JE I Gr / JE II Gr) பதவிகள் 2:2:1

விகிதசாரத்தில் நிரப்பப்படும் என்பதை கொள்கை அளவில் ஏற்றுக் கொள்கிறேன் எனத் தெரிவித்தார். முதல் கோரிக்கையாக இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலை பதவிகள் பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வாக வழங்குவது என்பது ஏற்க படாதது மிகவும் ஏமாற்றம் அளித்தது. தொடர்ந்து 1974 இக்கோரிக்கைக்காக 10 நாட்கள் அனைத்து திட்டங்களிலும் தொடர் உண்ணாவிரத போராட்டத்தை நடத்தியது. அதே ஆண்டில் சென்னை அண்ணாசாலையிலுள்ள தேவநேயபாவாணர் அரங்கில் பல்லவ மண்டல மாநாடு நடத்தப்பட்டது. இதிலும் நமது பிரதான கோரிக்கையான இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலை பதவிகள் பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வாக வழங்குவது என்பதை பெற்றுவிடுவோம் என நம்பினோம். மாநாட்டில் கலந்து கொண்ட அன்றைய மாநில மின்துறை அமைச்சர் திரு.O.P.ராமன் அவர்கள் முதல்வருடன் கலந்து பேசி முடிவெடுக்கப்படும் என அறிவித்து ஏமாற்றமளித்தார். தொடர் முயற்சியாக 1975ம் ஆண்டுகோவையில் சேரமண்டல மாநாடு நடத்தப்பட்டது. மாநாட்டில் கலந்து கொண்ட அன்றைய மாநில மின்துறை அமைச்சர் திரு சாதிக்பாட்சா அவர்களும் தீர்க்கமான முடிவினை அறிவிக்காமல் ஏமாற்றத்தையே அளித்தார்.

இந்த கால கட்டத்தில் 1975ம் ஆண்டு நாட்டில் அவசர நிலை பிரகடனம் பிறப்பிக்கப்பட்டது. இந்நிலை 1976ம் ஆண்டு வரை நீடித்தது. ஆளுநர் ஆட்சியின் இறுதி கட்டத்தில் இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலை பதவிகள் நேர்முகத் தேர்வு மூலம் நிரப்பிட உத்திரவு வழங்கியது. அதன்படி 1977ல் 180 பொறியாளர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டது. அதன்படி அவர்களுக்கு அந்த பதவிக்கான சம்பளமான ரூ.230ல் நியமனம் செய்தனர். ஆனால் நிறைய பொறியாளர் இப்பதவி உயர்வுக்கு முன்னரே இச்சம்பள விகதத்தை தாண்டியிருந்ததால் அவர்களின் சம்பளம் அடுத்தடுத்த ஆண்டு உயர்வு வழங்காமல் சரிசெய்தனர். இதனால் நமது பொறியாளர்கள் இரண்டு மூன்றாண்டுகள் ஆண்டுயர்வின்றி பணியாற்றவேண்டிய சூழல் ஏற்பட்டது. நமது தொடர் நடவடிக்கையினால் திட்ட அளிவிலிருந்த பட்டயம் படித்த தொழில் நுட்ப உதவியாளர்களின் பணிமூப்பு மாநில அளவிலான பணிமூப்பாக மாற்றப்பட்டு 1987ம் ஆண்டு பதவி உயர்வாக பெறப்பட்டது. பின்னர் தற்போதுஇயந்திரவியலுக்கும் பதவி உயர்வாக மாற்றப்பட்டுள்ளது.

எத்தருணத்திலும் துவண்டுவிட வில்லை சங்கம். தொடந்து போராடியது. வெற்றி பெற்றது.

வாழ்க பொறியாளர் சங்கம். வளர்க பொறியாளர் ஒற்றுமை.

கா.சிங்காரவேலு,
முன்னாள் பொதுச் செயலாளர்.

----

**Record Notes of discussions held with the representatives of the Engineering Diploma Holders Association at 3 P.M on 22.11.1973 in Deputy Chief Engineer's Room.**

Present : 1. Deputy Chief Engineer
2. Industrial Relations Advisor
3. Personal Assistant (Labour – I)

Representing the Association: Thiru N.Chandrasekaran, General Secretary and others

Point No :1. To promote Diploma Holders as Supervisors based on seniority as agreed by the Honourable Minister for Electricity.

The representatives of the Association demanded that instead of recruiting supervisors from outside, the Diploma Holders already in service as TCLs and gained some experience should be taken as supervisors.

It was pointed out that the recruitment from outside cannot be completely stopped and that particulars of Diploma Holders with more service is being collected so as to examine the question further. The Superintending Engineers who have not furnished the details will be reminded to expedite the particulars.

-----

In continuation with the discussion above the Board has called the particulars :

Copy of Memo No.333RJ/73-1 dated 5.12.73 from the Chief Engineer / General / Madras –2.

Sub : Recruitment – Class – III service – Diploma Holders working in the categories of RWE TWE details - called for - Regarding.

The representatives of the Engineering Diploma Holders Association have requested that direct recruitment to the posts of Section officer II Grade should be stopped and that the Diploma Holders in the department should be appointed by promotion on seniority. It has been pointed out to them that closing completely the channel of direct recruitment is not feasible. it has been proposed to call particulars of Diploma Holders in the service of the Board for examining the issue further.

The superintending Engineers are therefore requested to furnish the details about the Diploma Holders working in TWE and RWE also in TCL in the service of Board in the Performa enclosed.

The particulars of Diploma Holders in each branch viz, Electrical, Mechanical, Civil etc required should be furnished separately. As this information is required urgently, the superintending Engineers are requested to expedite the report in complete shape without omitting any division under their control so as to reach this office in a fort night from the date of receipt of this Memo.

(Sd.) C.Sanjeevi,
Chief Engineer / General.

----

**Record Notes of discussions held with the representatives of the Engineering Diploma Holders Association on 25.1.1974.**

Present : 1. Chief Engineer (Genaral)

2. Deputy Chief Engineer

Engineering Diploma Holders Association: Thiru.K.Thirupathy, B.A., B.L., MLA.,
Thiru.K.Singaravelu,
Thiru N.Chandrasekaran and others

The following issues represented by the Association were discussed.

1. Promotion of Diploma Holders in R.W.E / T.W.E as supervisors Grade II dispensing with direct recruitment.
   it was represented that for posts of draftsman Gr-III and Assistant Engineers, Direct recruitment has been dispensed with and promotions are given from the lower ranks and the Hounarable Chief Minister has assured dispensing with the Direct Recruitment to posts of supervisor under Government. (Government has not issued orders so far)
   Chief Engineer explained that this is a policy issue on which the decision cannot be taken independently without considering the repercussions it will have on the other categories for which direct recruitment is still in force. Chief Engineer also said that a proposal has been sent to Board for approval to the reservation of 25% of vacancies to

be filled by promotion from persons already in service, in the lower ranks and that on approval of the proposals by the Board, employees in service in R.W.E / T.W.E will be considered for promotion.

The association pleaded that atleast the recruitment be deferred for certain period viz. 10 years. Finally Thiru.K.Thirupathy MLA., represented that the reservation of 25% proposed be enhanced to 50%. Chief Engineer (General) said that this will be examined.

------

**03.02.1974 ல் விருதுநகரில் நடைபெற்ற EDHA வின் மத்திய பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்று....**

**5)** தமிழ்நாடு பொறியியல் சங்க மணிவிழாவில் அறிவிக்கப்பட்டபடி பணி ஆனையம் மூலம் மேற்பார்வையாளர்களுக்கு தேர்ந்தெடுப்பதை தவிர்த்து, முதன்மை அடிப்படையில் தர இசைந்தபடி மின்சார வாரியத்திலும் மேற்பார்வையாளர் பொறுப்புகளை டிப்ளமோதாரர்களுக்கு முதன்மை அடிப்படையில் தருமாறு மாண்புமிகு மின்துறை அமைச்சரையும் வாரியத்தையும் இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

**07.04.1974 ல் சென்னையில் நடைபெற்ற EDHA வின் செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்று....**

தீர்மானம் **1:** இரண்டாம் நிலை மேற்பார்வையாளர் பொறுப்புகளை முதன்மை அடிப்படையில் நிரப்பும்படி வாரியத்தை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

------

**04.07.1974 ல் சென்னை அண்ணாமலை மத்திய நூலகக் கட்டிடத்தில் நடைபெற்ற பல்லவ மண்டல மாநாட்டில் கலந்த கொண்ட மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் நமது கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு அவற்றிற்கு சில முடிவுகளை அறிவித்தார்கள்.**

அதில் ஒன்று...

உருவாகும் 100 சதவீத மேற்பார்வையாளர் பதவிகளில் 50 சதவிகிதம் பொறியியல் பட்டயதாரிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்.

-----

## 14.10.74 நாளிலிருந்து 23.10.74 வரை தொடர் உண்ணாவிரதம்

-----

**Record Notes of discussions held with the Tamilnadu Electricity Board Engineering Diploma Holders Association in the Chamber of The Chief Engineer (General) on 12.12.1974.**

Present : 1. Chief Engineer (Genaral)

2. Deputy Chief Engineer

Engineering Diploma Holders Association: Thiru.K.Thirupathy, B.A., B.L., MLA.,

Thiru.K.Singaravelu,

Thiru N.Chandrasekaran and others

The following issues represented by the Association were discussed.

1. Reservation of 50% of vacancies in the posts of Supervisors Grade – II and promotion from among Diploma Holders Employees already in service according to seniority.

The Association was informed that proposals have already been sent to the Board in this regard and that on receipt of orders further action will be taken. The matter will also be persued.

-----

**Resolution of the General Council Meeting of EDHA held on 08.02.1975 at Trichy.**

3(a). Reservation of 50% of vacancies in the posts of Supervisor Grade –II and promote the Diploma Holders already employed in the Board service according to seniority.

-----

Note : The Supervisors was redesignated as Junior Engineers as per Board Proceedings Ms.No.413, Dated 6th April, 1977

(இன்றைய இளநிலை பொறியாளர்கள் அன்று மேற்பார்வையாளர்கள் என்று அழைக்கப்பட்டனர்)

## *Our Representations*

To
**THE CHIEF ENGINEER PERSONNEL,**
TANGEDCO
Lr.No.GS/TNEBES/F1/D73 /2020,Dt.15.04.2020.

Respected Madam,

Sub: Calling for of Applications from eligible employees for Assistant Engineer / Electrical, Mechanical and Civil Promotions through Internal Selection –Requested Regarding.

Ref : 1. Lr.No.GS/TNEBES/F1/D47/2020, Dt.10.01.2020
2. Lr.No.GS/TNEBES/F1/D64/2020, Dt.11.03.2020.

--

Assistant Engineer posts are filled up in the Board through Direct Recruitment and by Internal Selection as per the Regulations in force. Presently Recruitment process of Assistant Engineers through Direct Recruitment has been initiated whereas the process for Internal Selection is yet to be done which is already due last year – 2019.

We had already represented in this regard to the respected Chairman cum Managing Director vide reference cited above.

Hence we request the Chief Engineer / Personnel to invite applications from the eligible employees for promotion to the post of Assistant Engineer / Electrical, Mechanical and Civil through Internal selection as per the prevalent ratio please.

Thanking you, Madam,

Yours sincerely,
**V.S. SAMPATHKUMAR /** General Secretary.

------------

To
**THE CHIEF ENGINEER PERSONNEL,**
TANGEDCO
Lr.No.GS/TNEBES/F1/D74 /2020, Dt. 15.04.2020.

Respected Madam,

Sub: Releasing of Promotion of Technical Assistant / Electrical through Internal Selection –Requested Regarding.

Ref: Lr.No.GS/TNEBES/F1/ D65 /2020, Dt. 11.03.2020.

--

Applications were called among eligible employees for promotion to the post of Technical Assistant through Internal selection more than a year ago. The received applications have been consolidated and scrutinized for issuing of promotions.

Huge number of vacancies exist in the post of Technical Assistant, affecting the routine activities throughout, in the fields of Operation, Maintenance and other special areas including Generating Stations. Citing the need we had already represented to the respected Chairman cum Managing Director vide reference above to fill up the vacant Technical Assistant / Electrical posts at the earliest.

We request the Chief Engineer / Personnel to complete the Internal Selection process of Technical Assistant / Electrical and issue selection orders at the earliest please.

Thanking you, Madam,

Yours sincerely,
**V.S. SAMPATHKUMAR /** General Secretary.

------------

To
**THE CHIEF ENGINEER PERSONNEL,**
TANGEDCO
Lr.No.GS/TNEBES/F1/D75 /2020, Dt. 15.04.2020.

Respected Madam,

Sub: Call for of Suitability Report for Technical Assistant to Junior Engineer / Mechanical II Grade Promotions –Requested Regarding.

Ref: Lr.No.GS/TNEBES/F1/ D62 /2020, Dt. 11.03.2020.

--

Suitability Report for Technical Assistant to Junior Engineer /Mechanical II Grade Promotions hasn't been called for almost a decade awaiting change in policy in the said promotions. Presently the much awaited change in policy of promotion has been approved.

The individuals awaiting for promotions have almost attained Selection Grade and very much aggrieved without their 1st promotion. Seniority list for 268 persons in the category of Technical Assistant /Mechanical. has been already approved and ready for call for. We had earlier represented to respected Chairman cum Managing Director vide reference cited in this regard.

**Hence we request the Chief Engineer / Personnel to call Suitability Report for Junior Engineer /Mechanical II Grade Promotions** among Technical Assistant / Mechanical please.

Thanking you, Madam,

Yours sincerely,
**V.S. SAMPATHKUMAR /** General Secretary.

------------

To
**THE CHIEF ENGINEER PERSONNEL,**
TANGEDCO
Lr.No.GS/TNEBES/F1/D76 /2020, Dt. 15.04.2020.

Respected Madam,

Sub: Conducting of DPC for Technical Assistant to Junior Engineer / Grade –II - Promotions –Requested Regarding.

Ref: Lr.No.GS/TNEBES/F1/ D63 /2020, Dt. 11.03.2020.

--

Suitability Report for Technical Assistant to Junior Engineer / Electrical Grade –II Promotions has been called for 227 Persons. The reports have been received in full shape and ready for further process of promotion.

We had already represented in this regard to respected Chairman cum Managing Director vide reference cited above.

**Hence we request the Chief Engineer / Personnel to convene the DPC committee and issue Junior Engineer /Electrical Grade- II Promotions** at the earliest please.

Thanking you, Madam,

Yours sincerely,
**V.S. SAMPATHKUMAR /** General Secretary.

------------

To
**THE CHAIRMAN cum MANAGING DIRECTOR,**
TANGEDCO,
Lr.No.GS/TNEBES/F1/D77/2020, Dt.15.04.2020

Respected Sir,

Sub: Issuing of promotions to the left out individuals in the recently released AEE / Electrical Promotion Orders – Subsequent Calling for of fresh panel to be initiated – requested regarding.

Ref: 1.Letter No.018358/519/G.11/G.111/2020-1, dated 21.03.2020
2. Lr.No.GS/TNEBES/F1/D.71/2020, Dt. 23.03.2020

---

Promotions were issued for the post of Assistant Executive Engineer /Electrical vide reference – 1 cited above for 140 persons (105 AEs and 35 JEs) cutting short the additional panel in a biased manner and leaving out 25 Assistant Engineers of 2007 batch without Assistant Executive Engineer promotions.

We had condemned this biased attitude and represented the matter Vide reference – 2 to the respected Chairman cum Managing Director cited, insisting to restore justice by issuing promotions to the left out persons (25 AEs and 8 JEs). We would like to reiterate that all the left out Assistant Engineers were Re-designated Assistant Engineers from Junior Engineer/Grade I. Presently all the affected individuals had represented to the respected Chairman cum Managing Director in this regard to consider their representation and issue their due Assistant Executive Engineer promotions.

Currently Assistant Executive Engineer /Electrical vacancies exist and hence we too once again pray the respected Chairman cum Managing Director to consider our genuine plea and do the needful to issue promotions for the left out just 25 Assistant Engineers of 2007 batch treating them on par with their counterparts who have been promoted and thus render justice please.

Moreover we request the respected Chairman cum Managing Director to instruct the Chief Engineer / Personnel to initiate process for further fresh call for of Assistant Executive Engineer / Electrical promotion as assured to us during our earlier representation please.

Thanking You, Sir,

Yours sincerely,
**V.S. SAMPATHKUMAR /** General Secretary.

------------

To
**THE CHIEF ENGINEER PERSONNEL,**
TANGEDCO
Lr.No.GS/TNEBES/F1/D 78 /2020, Dt. 17.04.2020.

Respected Madam,

Sub: Huge backlog in JE/Elec.I Grade posts to be filled up – Commitment by Board to Hon’ble High Court of Chennai in this regard - Conducting of DPC for JE/Elec.II Grade to JE/Elec.I Grade Promotions – Requested - Regarding.

Ref: 1. Letter No. 075171/191/G.1/ G.1(2)/2019-5, Dated: 16.11.2019
2. Letter No. 075171/191/G.1/ G.1(2)/2019-8, Dated: 17.02.2020
3. Letter No. 88345/330/G.1/ G.1(2)/2015-17, Dated: 26.02.2020
4. Memo No. 036976/397/G.4/G.41/PAR/2019, Dated: 21.05.2019
5. Memo No. 036976/397/G.4/G.41/PAR/2019-2, Dated: 30.07.2019
6. Lr.No.GS/TNEBES/F1/ D61 /2020, Dt. 11.03.2020.

--

Junior Engineer /Electrical Grade – II to Junior Engineer / Electrical Grade –I promotion panel has been inoperative for the past 7 years since 2013 due to various litigations. Hence the backlog in Junior Engineer / Electrical Grade – I post had mounted to around 2000 Nos. quite abnormally.

Due to the persistent insistence of our Sangam, suitability report for the post of Junior Engineer / Electrical Grade-I was called among 1285 persons (1251+23+11) at last, vide references 1, 2 and 3 above. But receiving of particulars from circles had been at a snail's pace and our Sangam had to inform the Personnel Management on this periodically to expedite.

It's a pity that despite the specific instructions vide references 4 & 5 above under the insistence of Respected Chairman Managing Director regarding sending ofSuitability and Performance Assessment Report in time from field, the abnormal delay couldn't be brought down.

The Personnel Management had to take additional efforts through reminders in speeding up the particulars. These efforts had borne fruit finally and we learn that particulars have been received from almost all circles and have been consolidated for further process to conduct DPC.

We sincerely thank the Personnel Management for the same.We had already represented in this regard to Respected Chairman Managing Director vide reference – 6 cited above and Respected Chairman Managing Director too had also assured us of an early action in this regard.

At this juncture we would like to remind the Personnel Management, that in the case (25224 of 2018) filed by Sangam against Direct Recruitment of Assistant Engineers,

***Board had assured the Hon'ble High Court of Chennai that Board will process the promotions of Junior Engineer / Electrical II Grade to Junior Engineer / Elec. I Grade after final disposal of the Writ in Madurai bench ( WA(MD) 1227 of 2018) in Junior Engineer / Elec. II Grade seniority.***

The final judgment of the aforesaid Madurai Bench case *(WA (MD) 1227 of 2018)* had been delivered since then on 02.07.2019.

Hence to honour the commitment given to the Hon'ble High Court of Chennai and to bring down the mounting backlog, **we request the Chief Engineer / Personnel to convene the DPC committee immediately and issue the Junior Engineer / Electrical Grade-I promotions** which is pending for quite long and thus render justice please.

Thanking you, Madam,

Yours sincerely,
**V.S. SAMPATHKUMAR /** General Secretary.

------------

To
**THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR,**
TANGEDCO,
Lr.No.GS/TNEBES/F10/D81 /2020,Dt.21.04.2020.
Respected Sir,
Sub: Outsourcing of Vacant Posts with Retired Employees - Violation of Settlement – Alternative means to be studied in discussion with Unions – Vehement objection raised – Withdrawal of Orders insisted - Reg.

Ref: 1. (Per.) CMD TANGEDCO Proceedings No. 61 Dated 13th April 2020.
2.Lr.No.GS/TNEBES/F10/ D /2017,Dt.25.01.2017.

---

T.N.E.B. Engineers' Sangam registers its vehement protest on the order cited under reference – 1, which proposes to fill up vacant posts with retired employees of Board through outsourcing. This experiment may look simple in implementation but not the solution on long term apart from violation of settlement with Unions.

Majority areas of TANGEDCO / TANTRANSCO are covered under Work Load Settlement which is made between the Board and the Unions periodically. Any change or alteration in this will lead to

violation of settlement. If at all any need arises for a change it should be carried out in the appropriate manner in discussion with the unions after giving proper 9A notice in this regard.

In the current settlement made a couple of years ago, Board had proposed to discuss on the Work Load even for the Non Work Load areas which aren't covered under the settlement. Committee has been constituted in this regard which is still alive. This has been done purely to streamline all the areas and imposing accountability scrupulously. Hence this order cited under reference – 1 on outsourcing doesn't augment well not just for the working class but also on the Board as a whole.

Similar such experiment in Substations alone (which is sparingly in existence presently) was highly objected by us vide our representation cited under reference – 2.

This experiment puts not only the outsourced employee at risk but also the costly equipment of the Board. Extending this to all posts will definitely spell doom to the Board. We are really perplexed by this decision as we can't understand the real reason behind this.

Whatsoever be the reason behind this decision, better alternative solution is possible only if this matter is discussed with unions and we TNEB Engineers' Sangam assure our fullest cooperation in this regard for the wellbeing of the Board.

Hence to honour the settlement and to go in for solutions on long term we request the respected Chairman cum Managing Director to call us for a discussion in this regard and also to withdraw the orders cited under reference – 1, thus render justice please.

Thanking you, Sir,

Yours sincerely,
**V.S.SampathKumar** / General Secretary.

-----

To
**THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR,**
TANGEDCO,
Lr.No.GS/TNEBES/F10/D82 /2020,Dt.21.04.2020.

Respected Sir,

Sub: Medical Expenses and Ex Gratia to select Govt. Departments Employees who get sickness due to COVID-19 - Extension of such facilities to Electricity Employees also – Insist necessary recommendation from Respected CMD to Govt. in this regard –requested Reg.

Ref: G.O. (Ms) No. 180, Dated: 04.04.2020

---

Vide G.O cited under reference Frontline Staff of select Govt. departments have been entitled of Medical Expenses and Ex Gratia in case of sickness due to COVID-19. This is highly appreciable as the frontline staff mentioned in the cited G.O. are braving the odds and risking their life in carrying out their Official responsibilities.

Respected Chairman cum Managing Director very well knows the fact that the working condition of the Electricity Employees is quite risky too even in normal conditions. COVID-19 has multiplied the risk factor much more as the Electricity Employees have to maintain uninterrupted power supply throughout including the hotspot areas with added pressure.

To ease out this pressure due to insecurity and to instill confidence among the Electricity Employees we request the respected Chairman cum Managing Director to recommend our case to the Govt. and get the benefits of the cited G.O. be extended to our Electricity Employees also please.

Thanking you, Sir,

Yours sincerely,
**V.S.SampathKumar** / General Secretary.

***"The life that is not examined is not worth living."***

\- ***Socrates***

***Board Orders***

TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED
ADMINISTRATIVE BRANCH

From

Er.J.Kalai Selvi,B.E.,M.B.A.,
Chief Engineer / Personnel,
8th Floor, N.P.K.R.R.Maaligai,
144, Anna Salai,
Chennai-600 002.

To

All the Chief Engineers /
Superintending Engineers /
TANGEDCO & TANTRANSCO.

Lr.No.018606/206/G43/G431/2020,Dt.18.03.2020.

Sir,

Sub: TANGEDCO – Class I & II officer PAR – Implementation of onlineSubmission of PAR – Reg.

Ref: 1. CMD Note approval dated 10.02.2020.
2. U.O.No.CE/IT/SE/IT-1/EE/IMS/AEE3/F.PAR/D212/2020, Dt.26.02.2020.

---

The Performance Assessment Reports (PAR) of Class II Officers have been send to this office by post. Any delay in receiving them caused great hindrance in preparation of panels so far.

Now, as per instructions of CMD vide reference cited, the software program for "PAR Appraisal and evaluation" has been developed and made available in the url:**http://192.168.150.67:8080/cc/TNEBpar/**

The functioning of the "URL" will come into effect from 01.04.2020 (PAR FOR 2019-2020). The working instructions for the same are furnished in the Annexure.

Therefore, all the Chief Engineer / Superintending Engineers are requested to issue suitable instructions to the respective staff and officers concerned to enter PAR for financial year 2019-2020 using the above software in their Region / Circle adhering to the working instructions as given in the annexure. Any difficulties arisen while sending PAR through online, the Computer Center / Head Quarters may be contacted with the mail address: **"aepence" and CUG:9445991351** for the clearance of the same.

(Sd/-- 18.03.2020)
J. KALAI SELVI
CHIEF ENGINEER / PERSONNEL.

---

**JE-II (E) Inter Se-Seniority**

With the continuous efforts of Sangam Board has issued the inter-se-seniority for Junior Engineer Grade II / Electrical for 1748 Engineers.

Ref : Memo. No. 024900/722/G.12/G.122/2020, Dated: 08.04.2020.

| | | |
|---|---|---|
| **1.** | **RAVI.K** | **01.06.1965** |
| **1748.** | **BHARATHAN.P** | **25.06.1976** |

# ஆளுமை திறன் வளர்ப்போம்.

**தொடர் –6**

முனைவர்.சா.சம்பத்
தேசிய பயிற்சியாளர்
செயலாளர் / திருச்சி மண்டலம்

## மன அழுத்த மேலாண்மை (Stress management)

மன அழுத்த மேலாண்மை இல்லாத மனிதர்கள் யாரும் இல்லை. பிறந்த குழந்தை முதல் சாகப் போகும் நொடி வரை மன அழுத்தம் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. அது மனிதருக்கு மனிதர் மாறுபடும். அவ்வளவே. மனிதன் மட்டுமல்லாது உலகத்தில் உள்ள எல்லா விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் மன அழுத்தம் உண்டு, கூட்டை விட்டு வெளியே செல்லும் பறவைக்கு இன்று ஒரு புழுவாவது இறை கிடைக்க வேண்டும் என்ற மன அழுத்தம். புழுவுக்கோ இன்று எந்த பறவை கண்ணிலும் சிக்காமல் இருக்க வேண்டும் என்ற மன அழுத்தம். எனவே அதிகம் ஆசை இல்லாத விலங்குகளுக்கும், பறவைகளுக்கும், மன அழுத்தம் இருக்கிற போது, நிறைய ஆசைகளையும், கனவுகளையும் வைத்திருக்கும் மனிதர்கள் மன அழுத்தம் இல்லாமல் இருப்பது சாத்தியமற்றது. எனவே தான் மன அழத்தத்தை நீக்குவது இயலாது. அதனை மேலாண்மை செய்து கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவது சாத்தியம்.

பொதுவாக மன அழுத்தம் வேண்டுமா? என்றால் நிச்சயம் வேண்டும். இல்லையென்றால் எந்த வேலையும் வீட்டில் அலுவலகத்தில் நடக்காது. ஆனால் அது குறிப்பிட்ட அளவை தாண்டும் போது நமக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது.

உதாரனமாக டியூப் லைட் எரிய 240 வோல்ட் கொடுத்தால் நன்றாக எரியும் குறைவான 120 வோல்ட் கொடுத்தால் எரியாது. அதே நேரத்தில் 440 வோல்ட் கொடுத்தால் டியூப் லைட் வெடித்துவிடும்.

அதைப்போல மிகக்குறைவான மன அழுத்தம் சாதிக்க உதவாது. மிக அதிக மன அழுத்தம் மனதையும் உடலையும் பாதிக்கும். சரியான அளவு மன அழுத்தம் நம் இலக்கு நோக்கி பயணிக்க உதவும்.

சரியான மன அழுத்தத்தை நேர்முறை மன அழுத்தம் (eustress) என்றும், அளவுக்கு அதிகமான மன அழுத்தத்தை எதிர்மறை மன அழுத்தம் (distress) என்றும் சொல்லப்படுகிறது.

பிரிவுப் பொறியாளரும் மன அழுத்தமும் இரட்டைகிளவி போல் பிரிக்க முடியாது உள்ளது என்பது உண்மையே. இன்று உள்ள சூழலில் பணியில் சிறப்பாக செயல்பட வேண்டும் என்பதற்காக எல்லா வேலைகளையும் இழுத்து போட்டுக் கொண்டு வேலை செய்யும் பிரிவு பொறியாளன் பெரும்பாலும் எதிர்மறை மன அழுத்தம் கொண்டவர்களாகவே இருக்கிறார்கள் என்பதே உண்மை. பெரும்பாலான பொறியாளர்கள் தங்கள் பையில் சுகர், பிரஷர் மாத்திரைகளோடு அலைவதே அதற்கு சான்று.

அதுவும் இந்த கரோனா வைரஸ் பரவும் நேரத்தில் பணிக்கு வருவதும், மின்சார விநியோகம் பாதிக்காமல் பராமரிப்பதும், தம்மையும் தம் ஊழியர்களையும் பாதுகாப்பதும் மிக பெரிய மன உளைச்சல் தான். ஆனாலும் எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வு புத்தரின் வார்த்தைகள் தான். அவர் சொன்ன அந்த வார்த்தை "இந்த நிலை மாறிவிடும்". இந்த கொள்ளை நோய் தாக்கமும் நிச்சயம் மாறிவிடும்.

மன அழுத்தம் மிகாமல் இருக்க புத்தரின் இந்த வார்த்தைகளே தாரக மந்திரம். எந்த பிரச்சனை என்றாலும் கண்களை மூடிக்கொண்டு மூன்று முறை ஆழ்மனதில் "இந்த நிலை மாறிவிடும்" என்று சொல்லுங்கள். பிறகு அதனைப்பற்றி கவலைப்படாமல் உங்கள் பணியை தொடருங்கள். நிச்சயம் அந்த நிலை மாறிவிடும்.

இந்த உலகில் உங்கள் வாழ்க்கையில் உங்கள் அலுவலகப் பணியில் சிலவற்றை மட்டுமே உங்களால் சரி செய்ய முடியும். அதனைத் தான் செய்ய வேண்டும். சிலவற்றை உங்களால் சரி செய்யவே முடியாது. அதனை முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும். இது என் பணியில்லை என்றால் அதிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும். முடியாத செலை முடிக்கிறேன் என்று முயன்று மன அழுத்தம் அதிகமாகி நம்மை அழித்துக் கொள்வது புத்திசாலித்தனமல்ல. அதைப் போல் மன அழுத்தம் தாளாமல் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதும் கோழைத்தனம். எந்த சூழலிலும் இந்த சமூகத்தில் நமக்கு வாழ உரிமையுண்டு.

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக பிரிவுகளுக்கு வரும் கூடுதல் பணிகள் தான் மன அழுத்தத்திற்கு காரணம் என்றால் அதனை தடுக்க கீழ்கண்ட மூன்று காரணிகளை பின்பற்ற வேண்டும்.

1. பிரச்சனை அல்லது கொடுக்கப்பட்ட புதய பணியை செய்து முடிக்க முடியாது போனால் நமக்கு வரப்போகும் மிக மோசமான விளைவுகளை முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.
2. வரப்போகும் விளைவுகளை உங்கள் மனம் ஏற்றுக் கொண்டு விட்டால் மன அழுத்தம் வராது. பதட்டம் தணிந்து மூளை வேலை செய்யும்.
3. இப்போது அந்த மோசமான விளைவுகளை தவிர்க்க திட்டமிட வேண்டும். திட்டம் தயாராகும். அதனை செயல்படுத்தும் போது பணி முடிக்கப்படும். பின் விளைவுகள் தவிர்க்கப்படும்.

அப்படி ஏதும் பணி நடைபெறவில்லையெனில் நாம் முதலிலேயே எதனையும் எதிர் கொள்ள தயாராக இருப்பதால் எதையும் சிறப்பாக சமாளித்துவிடுவோம்.

எதிரிகளுக்கு மட்டுமின்றி உங்களை பழிவாங்க நினைப்பவர்களுக்கும் நீங்கள் கொடுக்கும் ஒரே தண்டனை நீங்கள் அவர்கள் முன்பு எப்போதும் சிரித்துக் கொண்டே இருப்பது தான். நீங்கள் ஒரு தனி மனிதராக அழலாம். ஒரு பட்டயப் பொறியாளனாக ஒரு போதும் அழக்கூடாது. நம்முடைய திறமை அத்தனை மட்டத்திலும் ஒவ்வொரு நாளும் நிரூபிக்கப்பட்டுக் கொண்டே உள்ளது என்பது யாவரும் அறிந்ததே.

மன அழுத்தம் அலுவலகத்தில் மட்டுமல்ல பெரும்பாலும் குடும்பத்திலும் இருந்து வருகிறது. கணவன் மனைவி உறவில் ஆரம்பித்து குழந்தைகள், உறவினர், அக்கம் பக்கத்தில் இருப்பவர் என சொந்த காரணங்களால் மன அழுத்தம் அதிகரிப்பது இயற்கை. வீட்டில் மனைவியோடு அல்லது குழந்தைகளோடு சண்டை போட்டு விரக்தியில் அலுவலகம் வந்து எல்லாரிடமும் சண்டை போட்டு மன அழுத்தத்தை அதிகரித்துக் கொள்ளும் ஒர அதிகாரி மாலையானதும் முழுவதும் உடைந்து போய் விடுகிறார் என்பதே நிஜம்.

எந்த குடும்பம் நம் அலுவலக மன அழுத்தத்தை குறைக்கும் இடமாக உள்ளதோ அந்த வீடே சொர்க்கம். வீடு சொர்க்கமாக இருப்பதும் நரகமாக மாறுவதும் நம் கையில் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதற்கு நீங்கள் ஒர குடும்பத் தலைவராக இருப்பது அவசியம்.

மன அழுத்தம் அதிகரிக்க மிக முக்கிய காரணங்களில் ஒன்று கோபம். அலுவலகத்திலும் வீட்டிலும் பிரச்சனைகள் வெடிப்பதற்கு காரணம் இந்த குணமே. நீங்கள் பெரும்பாலும் எந்த நிலையிலும் கோபப்பட உரிமை இல்லாதவர். கோபம் முதலில் கோபப்படும் நபரையே பாதிக்கிறது. அவரது பிரஷர், சுகர், இதய துடிப்பு அத்தனையும் முதலில் அதிகமான பின்பு தான் அது மற்றவரை பாதிக்கும். எனவே எந்த நிலையிலும் கோபம் கொள்ள தேவையில்லை. பணியில் கடுமையாக இருக்கலாம், ஆனால் எல்லாரையும் விழுந்த கடிக்க வேண்டியதில்லை. கோபப்பட்டால்தான் இந்த பணி நடக்கும் என்றாலும் அந்த கோபம் உங்கள் வாயிலிருந்து தான் வரவேண்டும். மனதிலிருந்த அல்ல.

கோபம் எதனையும் சாதித்து தராது, மாறாக அது நம்மையே வீழ்த்திவிடும். எனவே அதனை அடக்க தெரிந்து கொண்டால் மன அழுத்தத்தை கட்டுக்குள் வைத்துக்

கொள்ளலாம். மன அழுத்தம் காரணமாக பல மன ரீதியான பிரச்சனைகள், உடல் ரீதியான பிரச்சனைகள் மற்றும் நடவடிக்கையில் விநோத மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவை நம் உடலை நோய்வாய் படுத்தவோ அல்லது ஏற்கனவே உள்ள நோயினை தீவிரப்படத்தவோ நேரிடலாம்.

அதிக மன அழுத்தம் காரணமாக கீழ்கண்ட பாதிப்புகள் ஏற்படலாம்.

1. நோய் எதிர்ப்புதிறனை குறைக்கும்
   மன அழுத்தத்தின் போத உடலில் சுரக்கும் கார்சிடால் எனும் நாளமில்லா சுரப்பு காரணமாக உடலில் நோய் எதிர்ப்பு திறன் குறைந்து உடல் பல நோய்களுக்கு ஆளாகிறது. பல ஆய்வுகள் மன அழுத்தத்தால் காச நோய், ஸ்ட்ரேப் டோகாக்கல் (ஏ) வகை கிருமிகள் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளதாகக் கூறுகின்றன. மேலும் சுவாச குழல் தொற்றுகளும் ஏற்படலாம்.
2. இதய நோய்கள் அதிகரிக்கும்.
   திடீர் மன அழுத்தத்தின் போது உங்கள் இதய துடிப்பு ஒழுங்கீனமாவதுடன் இதய வலியும் ஏற்படலாம். நீங்கள் கூடுதலாக எதிர்விளைவுகள் காட்டுபவராக இருந்தால் உங்களுக்கு மாரடைப்பு கூட ஏற்படலாம்.
3. நோய்களை தீவிரப்படுத்தும்.
   மன அழுத்தத்தால் ஏற்கனவே உள்ள நோய்களின் அறிகுறிகள் மிகைப்படைய வாய்ப்புள்ளது. உதாரணத்திற்கு ஆஸ்துமா, இரைப்பை குடல் நோய்கள், நாள் பட்ட வலி, மன நலப்பிரச்சனைகள் போன்ற நோய்கள் அதிகரிக்கச் செய்யும்.

எனவே மன அழுத்தத்தை குறைக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

**<u>உடற்பயிற்சி:</u>**

தினமும் குறைந்தது நாற்பத்து ஐந்து நிமிடம் நடைபயிற்சி மேற்கொள்ளவும். வேறு சுலப உடற் பயிற்சிகளையும் செய்யலாம்.

**<u>தியானம்:</u>**

அரைமணி நேரம் தியானம், யோகா அல்லது கண்களை மூடி முச்சு பயிற்சி செய்ய வேண்டும். மூச்சின் மீது கவனம் வைத்து மூச்சை மெதுவாக இழுத்து (சுமார் 5 நொடி) அதை போல வெளியே விடவும் (சுமார் 7 நொடி). இதனை 50 முறை செய்யலாம். கண்களை மூடி ஆழ்மனதிற்கு நேர்மறை கட்டளைகளை குறிப்பாக என்னால் முடியும், நான் தன்னம்பிக்கை மனிதன், மன அழுத்தம் என்னிடம் இல்லை என்று பலமுறை பதிவு செய்யுங்கள். இது மனோதத்துவ ரீதியாக உதவி புரியும். பிறகு குளித்து விட்டு அலுவலகம் செல்லுங்கள். எந்த பிரச்சனையும் என்னை எதுவும் செய்யாது என்ற நேர்மறை மனப்பான்மை கொண்டு பணி செய்யுங்கள். தேவையின்றி கோபப்படாதீர்கள், எந்த சங்கடத்தையும் மூளையில் எற்றாதீர்கள். மாலையில் நேரத்தோடு வீட்டிற்கு திரும்புங்கள். வீட்டிற்கு வந்ததும் அலுவலகப் பிரச்சசனைகளை பேசாதீர்கள்.குடும்ப நபர்களோடு மற்ற விஷயங்களை பேசுங்கள். இரவு உறங்க செல்லும் முன் படுக்கையில் கண்களை மூடி உட்கார்ந்து ஆழ்ந்து மூன்று முறை மூச்சை இழுத்துவிட்டு, பிரச்சனைகளை மனதில் இருந்து வெளியேற்றிவிட்டு தூங்கச் செல்லுங்கள். நிம்மதியாக தூங்குங்கள். நாளை நல்ல நாளாக விடியும் என்ற நம்பிக்கையோடு......!

.... தொடரும்.

**Man alone has the power to transfer his thoughts into physical reality; man alone can dream and make his dream comes true.**

\- **Napoleon Hill**

## ஆத்திச்சூடி தொடர்

**தொடர்....11**

### 11. ஓதுவது ஒழியேல்

எப்பொழுதும் கற்றுக் கொண்டே இரு....

மரணம் அடையும் வரை மனிதன் கற்றுக் கொண்டே இருக்க வேண்டிவனாக இருக்க வேண்டும். இதற்கு ஒரு சம்பவம் உதாரணம்.

சாக்ரட்டீஸ் சிறைச் சாலையில் இருக்கிறார். இன்னும் இரண்டு நாளில் அவருக்கு ஹெம்லாக் என்ற நஞ்சு அவர் உடலிலே ஏற்றப்பட இருக்கின்றது. அவரே குடிக்க வேண்டும். இல்லையென்றால் வற்புறுத்தி குடிக்க வைப்பார்கள். அப்போது அவர் இருந்த அறைக்கு நான்கு அறை தள்ளி ஒருவர் ஒரு பாடலை அழகாக பாடினார். அருமயான பாடல். காற்றினிலே தவழ்ந்து வந்த அந்த பாடல் சாக்ரடீஸின் காதுகளில் தஞ்சமடைந்தது. அதை மெய்மறந்து கேட்கிறார் சாக்ரடீஸ். உடனே பாடியவரை தேடிப் போகிறார் சாக்ரடீஸ்.

அவரை கைகூப்பி வணங்கி, இந்த பாடலை நான் படித்திருக்கிறேன். இவ்வளவு அழகாக இந்த பாடலை பாட முடியும் என்று ஒருபோதும் நான் நினைத்ததில்லை. எனக்கு இதை பாட கற்று தருவீர்களா என்று கேட்டார். தான் சாகப் போகும் போதுக் கூட கற்றுக் கொள்ள ஆவலுடன் வந்திருக்கும் சாக்ரடீஸை ஆச்சர்யத்துடன் பார்த்தார் பாட்டு பாடியவர். பிறகு கேட்டார் “நீங்கள் சாகும் தருவாயில் இருக்கும் போது இந்த பாட்டைக் கற்றுக் கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்”. அதற்கு சாக்ரடீஸ் நான் இறப்பதற்குள் இந்த பாட்டை கற்றுக் கொண்டேன் என்ற மகிழ்ச்சி இருக்குமே அதற்காக தான் என்றார்.

உலகம் போற்றும் மேதைகளுக்கே இந்த நிலை...

கற்றது கைம் மண்ணளவு கல்லாதது உலகளவு
வென்பற்றுள்ள கலை மடந்தை ஓதுகிறாள் - மெத்த
வெறம்பத் தயங்கூற வேண்டா புலவீர்!
எறும்புந்தன் கையால் எண்காண்!

கலைமகளே தான் கற்றது கைமண்ணளவே என்றும் இன்னும் கற்க வேண்டியது உலகளவு உள்ளது என்று கையைக் கட்டிக் கொண்டு இருக்கிறாள் என்று பொருள் பட ஔவை இப்பாடலில் பாடியுள்ளார்.

“பட்டயம் பெற்றுவிட்டீர்கள் இனி வாழ்க்கை முழுவதும் வசந்த சோலை தான் என நினைத்து விடாதீர்கள். வசந்த சோலையை நாம் தான் உருவாக்க வேண்டும், அது நம் கைகளில் தான் இருக்கிறது. ஆனால் வசந்த சோலைக்கு பாதை முழுவதும் முட்களாலும் கற்களாலும் ஆனவை தான் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அவற்றை தாங்கும் திரானியையும் திறமையையும் இந்த பட்டயம் வழங்குகிற நாளில் வளர்த்துக் கொள்ளுங்கள்” என்று ஒரு பாலிடெக்னிக் கல்லூரி பட்டயம் வழங்கும் விழாவில் **திரு.வெ.இறையன்பு**, இ.ஆ.ப அவர்கள் உறையாற்றினார்கள்.

நாம் மதிக்கப்படுவது, நாம் எவ்வளவு தெரிந்து வைத்துள்ளோம் என்பதை பொறுத்துதான் இருக்கிறது. பட்டயம் பெற்ற நமக்கு பாதை முழுவதும் முட்களாலும் கற்களாலும் ஆனவை என்பதினால், நாம் செய்யும் வேலைப் பற்றியும், வாழ்வியல் பற்றியும் தொடர்ந்து கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். நாம் இன்று படித்த தொழில்

நுட்பங்கள்யாவும் நாளை காலாவதியாகும். புதுப்புது கருவிகள் வரும், அதை கையாள வேண்டிய தருணங்கள் நமக்கு ஏற்படும். இதனை வெற்றிகரமாக இயக்க இதைப் பற்றிய புரிதல் நமக்கு வேண்டும்.

நமது முன்னாள் பொதுச் செயலாளர்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டாக வேண்டும். ஒருவர் பொர்.S.செல்வத்தரசு. அவர் பட்டயம் படித்துவிட்டு நமது அமைப்பில் சிறந்த பணியாற்றியிருக்கிறார். அவரது ஆங்கில புலமை வியக்கவைப்பது. அவர் ஜப்பானிய மொழி, ரஷ்ய மொழி, சீன மொழி, சமஸ்கிருத மொழி ஆகியவற்றில் நல்ல பயிற்சி உடையவர். அவர் மின்சார வாரியத்திலும், பொறியாளர் சங்கத்திலும் சிறப்பான பணியாற்றிவிட்டு, பின்னர் ஜப்பானில் உள்ள நிறுவனத்தில் உயர்ந்த பதவியில் இருந்து சிறப்பாக பணிபுரிந்திருக்கிறார். அது அவரின் தொடர் கற்றலின் பயனே. அவர் நம் அனைவரையும் தொடர்ந்து ஏதாவது ஒரு விஷயத்தை கற்றுக் கொண்டே இருக்க வேண்டும் என்று வலியுறுத்துவார். பின்னர் பொர்.வி.அசோக்குமார் அவர்கள். அவரும் தொடர்ந்து மின்சாரம் மட்டுமல்லாது தொழிலாளர் சட்டம், யோகா, சமஸ்கிருதம், Energy auditing, மனிதவளம் போன்ற துறைகளில் பட்டம், பட்டயம் ஆகியவைகளை தனது தொடர் கற்றல் மூலம் தன் வாழ்நாளின் இறுதி வரை பெற்று வந்தார்.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் நமக்கு ஏதேனும் தகவல்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் அதற்கான புத்தகத்தை தேடி சில கிலோமீட்டர் தூரம் சென்று தெரிந்தவர்களிடமோ அல்லது நூலகத்திலோ சென்று தான் பெறமுடியும். இன்று நிலை அப்படியில்லை, நம் அனைவரின் கைகளிலும் நவீன வசதிகளுடன் கூடிய கைப்பேசி. சிறு விரலசைவில் உலகத்தின் அனைத்து தகவல்களும் ஒரு நொடியில் நம் கைகளில்.

இன்று நமக்கு தேவை கற்க வேண்டும் என்ற ஆவல் மட்டுமே. பட்டயப் பொறியாளரான நாம், நம்மை நிலை நிறுத்திக் கொள்ள, கற்றலால் தொடர்ந்து நம்மை மேம்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

ஆகவே ஔவையின் மொழியில் எப்பொழுதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும்.

தொகுப்பு : நே.ரா.செந்தில்,
செயலாளர் / வெளியீடு.

---

**Yet another example for the dedicated service of our Board Employees :**

During this Corona period, stator coil earth fault occurred in TNEB Hydro Generating plant Moyar(3×12 MW)-unit 2 and rotor pole earth fault in Hydro generating station Kadamparai (4×100 MW) - unit 3. Normally these defects will be rectified by tendering the works to firms. Our TNEB Hydro Engineers and staffs worked day and night and attended the defects in 10 days even in this odd time. The units were put back into service successfully. Chief Engineer / Hydro, Er.Muralidharan, recorded his congratulations and appreciations to Superintending Engineer / Kundah, Superintending Engineer / Kadamparai, Engineers and staffs of Moyar PH and Kadamparai PH for their tireless work.

**TNEB Engineers'Sangam congratulates the team.**

## சமுதாயத் தொண்டில் பொறியாளர் சங்கம்:

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் தொடர்ந்து சமுதாய பணியில் தன்னை ஈடுபடத்திக் கொண்டு வந்துள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து நம் மின்சார வாரிய பணியாளர்களை பாதுகாக்கும் நோக்கத்துடன் திருநெல்வேலி மேற்பார்வை பொறியாளர் அலுவகத்தில் அம்பேத்கர் எம்ப்ளாயீஸ் யூனியனுடன் இணைந்து 15.04.2020 முதல் தொடர்ந்து நான்கு நாட்கள் கபசுர குடிநீர் வழங்கப்பட்டது. இப்பணியினை மேற்பார்வை பொறியாளர் / திருநெல்வேலி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.பின்னர் 20.04.2020 முதல் தொடர்ந்து மூன்று நாட்கள் சங்கரன் கோயில் கோட்ட அலுவலகத்தில் பசியில்லா அறக்கட்டளையுடன் இணைந்து கபசுர குடிநீர் வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் நமது பொறியாளர் சங்கத்தின் தூத்துக்குடி அனல் மின் நிலைய கிளை சார்பாக அனைத்து பணியாளர்களுக்கும் 21.04.2020 அன்று கபசுர குடிநீர் வழங்கப்பட்டது. இந்நிகழ்வை தலைமை பொறியாளர் / தூத்துக்குடி அனல் மின் நிலையம் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.தொடர்ந்து 22.04.2020 அன்றும் 23.02.2020 அன்றும் அனல் மின் நிலைய பணியாளர்கள் குடியிருப்பு பகுதிகளில் கபசுர குடிநீர் வழங்கப்பட்டது. இச்சிறப்பான சமுதாய நிகழ்வில் மேற்பார்வை பொறியாளர்கள், செயற்பொறியாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## e - வடிவில் மின் அலை:

தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றினால் ஊரடங்கு அமல்படுத்தப் பட்டிருப்பதால் மார்ச் மாத மின்அலை அச்சிட முடியாத நிலை ஏற்பட்டது. இருந்தும் ஒரு இதழ் தனது நோக்கமான, தகவல்களை அதன் வாசகர்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டிய அவசியமும் கடமையும் கூட. இந்நிலையில் மின்அலை இதழினை e -வடிவில் வெளியிடலாம் என்ற யோசனை பொர்.P.M.மாரியப்பன், செயலாளர் / தலைமை நிலையம் அவர்களும், பொர்.S.செந்தில்முருகன், பொருளாளர் / சென்னை வளர்ச்சி வட்ட கிளை அவர்களும் தெரிவித்தார்கள். பின்னர் அதன்படியே மின்அலை இதழ் மின்னனு வடிவத்தில் வெளியிட முடிவு செய்யப்பட்டு 04.04.2020 அன்று நமது தொழிற்சங்கத்தின் கருத்துப் பெட்டகம், முன்னாள் துணைத் தலைவர் / சிவில் பொர்.S.கண்ணன்அவர்களால் வெளியிடப்பட்டது. இந்த இக்கட்டான நிலையில் சில நொடிகளில் அனைவரின் கைகளிலும் இவ்விதழ் கிடைக்கும்படி பொறியாளர் சங்கத்தின் அனைத்து வாட்ஸ்அப் குழுவிலும் வெளியிடப்பட்டது. நமது வலைதளத்திலும் வெளியிடப்பட்டது. இது நமது சங்க உறுப்பினர்களிடம் மிகுந்த வரவேற்பினை பெற்றது. அனைவருக்கும் இவ்விதழை கிடைக்க செய்த மனதிருப்தி ஏற்பட்டது. இதற்காக அனுமதி வழங்கிய மாநிலத் தலைவர், பொதுச் செயலாளர், பொதுப் பொருளாளர் உள்ளிட்ட பொறுப்பாளர்களுக்கும், வெளியிட்ட முன்னாள் துணைத் தலைவர் / சிவில் பொர்.S.கண்ணன் அவர்களுக்கும், மின் அலை ஆசிரியர் குழுவிற்கும், ஆதரவளித்த மின்அலை வாசகர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

புத்தகத்தினை அச்சு வடிவில் அச்சு மை மற்றும் அச்சு காகித வாசனையுடன் படிப்பதே ஓர் அழகு. ஆனால் ஊரடங்கு தொடர்வதால் இம்மாத இதழும் மின்னனு வடிவத்திலியே வெளியிடப்படுகிறது. விரைவில் ஊரடங்கு ரத்து செய்யப்பட்ட உடன் வரும் மாத மின் அலை இதழ் அச்சு வடிவில் வெளியிடப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நே.ரா.செந்தில்,
செயலாளர் / வெளியீடு.

## Retirement is yet another graduation

**On Superannuation:**

**Er.N.Dhanapal**,Secretary /CoimbatoreReg./AEE/Dev. cum PRO/CBE EDC South,**9965232555**.

**Er.S.Selvaraj**, President / Virudhunagar Branch /AEE/S/ 230 KV SS /Anuppankulam/ Virudhunagar , **9345238647**.

**Er.K. Gurusamy**, Former GCM / MTPS/ AEE / O&E / MTPS1 /MTPS Branch, **9442699934.**

**Er.G.Balasubramanian,** Former Treasurer/TTPS/ AEE/M/MPM-2/TTPS Branch, **9842672680.**

**Er.M.Rajarathinam**, Former Joint Secretary/ JE /O&M /R.K.Nagar/ Chennai North Branch,**9600691691.**

**Er.J.Anantharaman**, EE /230 KV Switch Yard SS/ ETPS /Chennai North Branch, **9841445564.**

**Er.P.Rajadurai Pandy**, EE / O&M / Krishnagiri / Krishnagiri Branch, **9943725858.**

**Er.P.Balaji**, EE / Chinnamanur/Theni Branch, **7904334968**.

**Er.K.Nagarajan,** AEE/Mtce. / 230 KV SS/ Kadaperi / Chennai South Branch, **9944184690.**

**Er.T.Sudalai Pandi,** AEE / 230 KV WF SS/Amuthapuram/ Tirunelveli Branch, **9442055437.**

**Er.T.S.Velusamy,** AEE / West / Tindivanam/ Villupuram Branch,**8870909499.**

**Er.D.Selvadore Joseph,** JE1 /E/CAD/ TTPS Branch, **9150737162.**

**Er.V.Gunasekaran,** JE / O&M / Kidarankondan/ Nagai Branch, **9486457354.**

**Er.R.Manoharan,** JE1 / S / 110 KV Grid SS/ Punalkulam /Pudukkottai Branch, **9600130497.**


**Er.K.Venkatasubramaniyan**, JE / O&M /Ambasamudram Rural /T.lveli Branch, **9442115975**.

**On Voluntary retirement:**

**Er.G.Sivayan**, JE1 / Ambattur SIDCO SS / Chennai West Branch, **8610043726.**

**Sangam wishes a Happy retired life**

## LT Metering Hand Book







இந்த புத்தகம் அனைத்து பிரிவு அலுவலர்கள் முதல் செயற்பொறியாளர் வரையிலும், கணக்கீட்டு பணியாளர்கள் முதல் கணக்கீட்டு அலுவலர்கள் வரையிலும், முகவர்களுக்கும் பயன்படும் நூலாக தொகுத்து அளிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் கணக்கீட்டு பணியாளர்கள் கடமைகள், மின்னளவி குறைபாடுகள், 100 வகையான மின்அளவிகளில் ரீடிங் எடுக்கும் முறைகள், வாரிய உத்திரவுகள், ஒழுங்குமுறை ஆணையம் வெளியிட்ட தீர்ப்புகள், கெப்பாசிட்டர் குறைபாடுகள், தண்டதீர்வை விதிக்கும் முறைகள், Miscellaneous Charges, மின்கட்டணம் சரியாக கணக்கிடும் முறைகள், வருவாய் துறை உத்திரவுகள் மற்றும் சோலார் நெட் மீட்டர் உத்திரவுகள், இன்னும் பிற வாரிய பணிக்காக தேவைப்படும் செய்திகள், பாதுகாப்பு குறிப்புகள் போன்றவை தொகுத்து அளிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்நூலினை வாங்கி பயனுறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

- **S.சிவசுப்பிரமணியன்,**
- செயற்பொறியாளர் (ஓய்வு),
முன்னாள் கிளைத் தலைவர்,
ஈரோடு மற்றும் கோபிக் கிளை.
**9843027991.**

**குறிப்பு : இந்நூலின் விலை ரூ.300/-., கூரியர் கட்டணம் ரூ.75/-., மொத்தம் ரூ.375/-.**

"Sorrow prepares you for joy. It violently sweeps everything out of your house, so that new joy can find space to enter. It shakes the yellow leaves from the bough of your heart, so that fresh, green leaves can grow in their place. It pulls up the rotten roots, so that new roots hidden beneath have room to grow. Whatever sorrow shakes from your heart, far better things will take their place."

— Rumi

## கண்ணீர் அஞ்சலி

25.01.2020 பொர்.S.கவிதா/ உதவி பொறியாளர்/ C&I/ மேட்டூர் அனல் மின்நிலையக் கிளை அவர்களின் **தந்தையார்.** 9789519795

06.04.2020 பொர்.A.கார்த்திகேயன்/ உதவி செயற்பொறியாளர்/ 230 கி.வோ R.A. புரம் துணை மின் நிலையம் / சென்னை மையக் கிளை அவர்களின் **தந்தையார்.** 8072886250

06.04.2020 பொர்.M.விஜு / இளநிலைபொறியாளர்–II / சூரியன்பாளையம் துணை மின் நிலையம் / ஈரோடு கிளை அவர்களின் **துணைவியார்.** 9489785090

06.04.2020 பொர்.P.ராஜேந்திரன்/ இளநிலை பொறியாளர் / 230 கி.வோ. கடப்பேரி துணை மின் நிலையம் / சென்னை தெற்கு கிளை அவர்களின் **தாயார்.** 7397453530

10.04.2020 பொர்.J.Hepsy Parimala / இளநிலை பொறியாளர் / O/o the SE/M2/ MTPS-1 / MTPS கிளை அவர்களின் **தாயார்.** 9245114808.

11.04.2020 பொர்.A.முருகன்/ செயற்பொறியாளர்/ கீரனூர் / புதுக்கோட்டை கிளை அவர்களின் **தாயார்.** 8220414855.

13.04.2020 பொர்.M. செந்தில்குமார் / இளநிலை பொறியாளர்–II / E /CAD / TTPS கிளை அவர்களின் **தந்தையார்.** 8925271400.

19.04.2020 பொர்.C.மாலதி / இளநிலை பொறியாளர் / ஈராடு கிராமியம் / ஈரோடு கிளை அவர்களின் **தாயார்.** 9487544434.

**ஆகியோர் இயற்கை எய்தினார்கள். குடும்பத்தாரை இழந்து வாடும் பொறியாளர்களுக்கு சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.**



**உறுப்பினர்கள் அனைவருக்கும்**

**மே தின வாழ்த்துக்களை**

**தெரிவித்துக் கொள்கிறோம்**

**- பொதுச் செயலாளர்**

**MIN ALAI - April - 2020 RNI No. TNBIL / 2012 / 47622**
**Printed Book Periodical**











TTPS கிளையில் நடைபெற்ற கபசுர குடிநீர் வழங்கும் நிகழ்ச்சி

நெல்லை கிளையில் நடைபெற்ற கபசுர குடிநீர் வழங்கும் நிகழ்ச்சி








Published by : V.S.Sampathkumar, General Secretary on behalf of
Tamil Nadu Electricity Board Engineers' Sangam, # 144, Annasalai, Chennai - 600002.
Printed by : T.P.Kumar Gupta at T.P.Offset Printers, Old No.15/1, New No.18,
Amman Koil St., 1st Lane, Kondithope, Chennai - 600079, Edited by : N.R.Senthil